விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கலுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம் (C-1994)
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 16 புதன்கிழமை (02.09.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

## தமிழின அழிப்புக்கு நீதி கிடைக்க

# சர்வதேச பொறிமுறை

## வடக்கு அமர்வில் பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்பு தொடர்பில் நீதியை பெற்றுக் கொள்வதற்கு சர்வதேச பொறிமுறையே அவசியம் என்ற பிரேரணை வடக்கு மாகாணசபையில் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டு உள்ளது. நிறைவேற்றப்பட்ட இப் பிரேரணை விரைவில் ஐ.நா மனிதவுரிமை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## நாடா. குழுக்களின் பிரதித் தலைவராக செல்வம் எம்.பி தெரிவு



(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத்தின்

23ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு நாளை

(கொழும்பு)


நேற்றைய தினம் கூடிய புதிய அரசாங்கத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வானது, சபை நடவடிக்கைகளை அடுத்து நாளை 3ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 9.30 மணிய

23ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளூர் பொறிமுறை நீதியை நிலைநாட்டாது

### சர்வதேச பொறிமுறையே அவசியம் - விக்கி



(யாழ்ப்பாணம்)


சர்வதேச குற்றங்களை உள்ளூர் பொறிமுறை மூலம் விசாரிப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியினைப் பெற்றுத்தராது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் இலங்கையின் குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேச பொறிமுறையே அவசியம் என்ற பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற பிரச்சினைக்கு நீதியினையும் உரிமையையும் பெற்றுக் கொடுக்க நீண்ட காலமாக

23ஆம் பக்கம் பார்க்க....

## சபாநாயகராக கரு ஜெயசூரிய



(கொழும்பு)

இலங்கையில், புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று நாடாளுமன்றம் கூடிய பொது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகர் பதவிக்காக நாடா

23ஆம் பக்கம் பார்க்க....

## எல்லோரும் ஏற்கும் அரசியல்யாப்பு இல்லாதது துரதிர்ஷ்டவசமானது!

### புதிய நாடாளுமன்றில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)



தேசிய - சர்வதேச ரீதியில் எதிர்கொள்ளும் சவால்களில் வெற்றி பெறுவதற்கு தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இந்நாட்டின் புதிய நாடாளுமன்ற கூட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றிய ஜனாதிபதி, யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டை கட்டி எழுப்புவதற்கான வாய்ப்பு ஏற்பட்டாலும் இரு பிரதான கட்சிகளுக்கிடையே நிலவிய முரண்பாடுகளின் காரணமாக அந்த வாய்ப்பு கைவிடப்பட்டதாகத் தெரிவித்தார்.

தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, தேசிய அரசாங்கமொன்றை உருவாக்குவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்ததாகவும் இதன்படி புதிய நாடாளுமன்றத்தில் தேசிய அரசாங்க

24ஆம் பக்கம் பார்க்க....

## கணவனும் மனைவியும் எம்.பியாக பதவியேற்பு



(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத்தில் கணவனும் மனைவியும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நேற்று செவ்வாய்க்கிழமை பதவியேற்றுக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட

24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மக்கள் எழுச்சிக்கு ஏற்பாடு

### முக்கிய விடயங்கள் இன்று கலந்துரையாடப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தவும் உள்ளக விசாரணை மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பதை தெரியப்படுத்தவும் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு,

ஜனநாயக ரீதியில் பெரும் எடுப்பிலான கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் கையெழுத்துப் போராட்டத்தை நடத்துவது தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு இல. 43, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் அனைத்துப் பொது அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் மற்றும் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர். (ந)

## கோத்தா மீது விசாரணை



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் ஊழியர்களை ஈடுபடுத்தியமை மற்றும் பல்வேறு விடயங்கள் தொட


23ஆம் பக்கம் பார்க்க....

## நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சர்வதேச பொறிமுறையே வேண்டும்"

## சிவாஜிலிங்கம் தனித்து கவனயீர்ப்பு




(யாழ்ப்பாணம்)

இலங்கை மீது சர்வதேச பொறிமுறையே வேண்டும் என கோரி வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தனித்து கவனயீர்ப்பு ஒன்றினை நேற்றையதினம் மேற்கொண்டிருந்தார்.

சிவாஜிலிங்கத்தின் இக் கவனயீர்ப்பில் கலந்து கொள்ளாத ஏனைய ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேடிக்கை பார்த்த படி சென்றிருந்தனர்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னதாக குற்றம் செய்தவர்களே குற்றத்தை விசாரணை செய்வதா? என்ற வாசகங்களடங்கிய பதாகைகளினை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் சபை உள்ளே ஈடுபட்டிருந்தார்.

இதற்கு முன்னதாக சபை ஆரம்பமாவதற்கு முன்னர் தனது போராட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு ஏனைய உறுப்பினர்களிடம் சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்திருந்தர்.

இருந்த போதிலும் அதற்கு உறுப்பினர்கள் எவரும் உடன்படாத காரணத்தினால் தனித்து கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தார்.

இதேவேளை கடந்த அமர்வின் போது சிவாஜிலிங்கத்தால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் உட்பட எவரும் ஆதரவளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

பருத்தித்துறை அல்வாய்ப் பகுதியில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைது செய்த சந்தேக நபரை எதிர்வரும் 14ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பிரஸ்தாப நபரை போதனா வைத்தியசாலைக்குச் சென்று நேற்று பார்வையிட்ட நீதிபதி அங்கு வைத்து இந்த விளக்கமறியல் உத்தரவை வழங்கியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரஸ்தாப நபர் பொலிஸாரைத் தாக்கிவிட்டு தப்பியோட முயற்சித்த பொழுது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரைக் கைது செய்திருந்தனர்.

பிரஸ்தாப நபர் ஏற்கெனவே கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக தேடப்பட்டு வந்தவர் எனத் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-3,60)

## தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான, இரண்டு பிள்ளைகளின் தாயார் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியை சேர்ந்த நடராசா சுமித்திரா (வயது 54) என்பவரே உயிரிழந்தவராவார்.

பணக்கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டு அதனால் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக நேற்றையதினம் அதிகாலை ஒரு மணியளவில் தனது வீட்டில் தன்னைத்தானே தீ மூட்டிஎரிந்துள்ளார்.

உடல் முழுவதும் எரிந்தநிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அதிகாலை 5 மணியளவில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (செ-9)

## மகிந்தவுக்கு முன்வரிசை ஆசனம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றில் முன்வரிசையில் ஆசனமொன்று வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 9.25 மணிக்கு நாடாளுமன்றுக்கு மகிந்த வருகை தந்திருந்தார்.

முன்வரிசையில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால சில்வாவுக்கு அடுத்த படியாக மகிந்த ராஜபக்ஷ அமர்ந்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர், உறுப்பினராக பதவியை ஏற்றுக் கொள்ளும் ஆவணத்தில் மகிந்த கையொப்பமிட்டார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய போது குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவுக்கு, நாடாளுமன்றில் பணிகளை முன்னெடுக்க வழங்கிய ஒத்துழைப்புககு இவ்வாறு நன்றி பாராட்டியுள்ளார். (செ-12)

## வித்தியா கொலை; 09 சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 09 சந்தேகநபர்களின் விளக்க மறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய 09 சந்தேக நபர்களும் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 09 சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஒருவர் முதல் தடவையாக நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகியுள்ளார்.

மேலும் மாணவி வித்தியாவின் கொலை தொடர்பில் சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரிகள் மற்றும் தடயப் பொருட்களினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட மரபணு அறிக்கை தெளிவில்லாததால் அவற்றை மீண்டும் பகுப்பாய்வுகது உட்படுத்துமாறும் நீதவான் எஸ்.லெனின் குமார் உத்தரவு பிறப்பித்துள்ளார். (செ-4)


# மானிப்பாய் கோவில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: கணக்காளர்
சம்பள குறி இல. 104/10
சம்பள அளவுத் திட்டம்: 10700-120×10-130×10-13200
(66/2006 இன்படி)

(அ)
கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்டகணக்கு பதவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ)
ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ)
கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திர சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 ஆண்டுகால அனுபவம். அல்லது க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பப்படிவங்களை தலைமைக்காரியாலயத்தில் அலுவல நேரத்தில் ரூ.10/= செலுத்தி பெற்றுக் கொள்ளமுடியும். பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் யாவும் 18.09.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பொதுமுகாமையாளர் ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அனுப்பப்படும் தபால் உறையின் இடது மூலையில் கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடல் வேண்டும்.கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அப்பணியாளர்கள் தங்கள் சங்கத்திற்கு ஊடாக விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம் (வ.து),
மானிப்பாய்.

2015.01.13 (சி-2000)



# கண்ணீர் அஞ்சலி

## அமரர் Dr.பூ.உரோமகேஸ்வரன்

பாரம்பரிய சித்த ஆயுள்வேத பரம்பரைக்குரியவரும், வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் சுதேச மருத்துவப் பணிப்பாளராக கடமையாற்றியவரும், லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி அதிபராக இருந்தவருமான சுதுமலையைச் சேர்ந்த அமரர் Dr.பூ. உரோமகேஸ்வரன் அவர்கள் அமரத்துவம் அடைந்தனதை நினைந்து துயரடைகின்றோம். சித்த ஆயுள்வேத மருத்துவத்தை சிறந்த முறையில் முன்னெடுத்த ஒரு சிறந்த சுதேச வைத்தியரை நாம் இழந்து விட்டோம். அவரது பிரிவினால் வேதனைப்படும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலை தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமான் பாதாரவிந்தங்களை சேவிக்கின்றோம்.

Dr.ஜெ.ஜெயலன், Dr.திருமதி ச.ஜெயலன்
சுஜீவா வைத்தியசாலை
தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை,
நாச்சிமார் கோவிலடி k.k.s வீதி, யாழ்ப்பாணம். (சி-2001)



# இதய அஞ்சலிகள்

## அமரர் குணரத்தினம் பராசக்தி

எனது நண்பர் Dr.சுரேந்திரன் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை) அவர்களது அன்பு வளர்ப்புத் தாயார் அமரர் குணரத்தினம் பராசக்தி அவர்களது மறைவுச் செய்து அறிந்து நாம் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியுமடைந்தோம். என் நண்பருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவரது பிரிவினை தாங்கும் சக்தியையும் அன்னாரது ஆன்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு நண்பன் Dr.ஜெயலன், Dr.Mrs.ச.ஜெயலன்
சுஜீவா வைத்தியசாலை
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (சி-2001)



# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை பிரதேச சபை ஊழியராகக் கடமையாற்றும் முனியாண்டி சந்திரன் என்பவரது தாயாராகிய

## "முனியாண்டி குமரக்கா"

28.08.2015இல் காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
பருத்தித்துறை பிரதேச சபை
புலோலி
(சி-2004)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்
## வட இலங்கை சுதேச வைத்தியசபை

காலம்:-06.09.2015 பி.ப:-2.00 மணி
இடம்:-லங்காசித்த ஆயுள்வேத கல்லூரி மண்டபம்,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.


30.08.2015 இடம்பெறவிருந்த மேற்படி பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் 06.09.2015 அன்று இடம்பெறும். அனைத்து சித்த ஆயுள்வேத வைத்தியர்களையும் நலன்விரும்பிகளையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

(சி-1998) வட இலங்கை சுதேச வைத்திய சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவர் குறித்த மைத்திரியின் தீர்மானம் ஜனநாயக ரீதியானது

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

**எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு குறித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானம் ஜனநாயக ரீதியான தீர்மானம் என, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவினை எதிர்க்கட்சிகளே செய்ய அனுமதிப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். இது தொடர்பில், சிங்கள ஊடகமொன்று துமிந்த திஸாநாயக்கவிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்யும் உரிமையை ஜனாதிபதி, எதிர்க்கட்சிகளிடமே ஒப்படைத்தார்.எதிர்க்கட்சித் தலைவரை தெரியும் அதிகாரத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு அண்மையில் ஜனாதிபதிக்கு வழங்கியிருந்தது.

அதன் அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் தெரிவினை எதிர்க்கட்சிகள் மேற்கொள்ள வேண்டுமென விடுத்த அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டியது.

நாட்டின் ஜனாதிபதி, கட்சியின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதியின் இந்த தீர்மானம் மற்றுமொரு மகத்தான ஓர் தீர்மானமாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் மூன்று பிரதான கட்சிகளே அங்கம் வகிக்கின்றன.

விமல்வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி கூட்டணியின் பங்காளிக் கட்சியல்ல என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சு.கவின் 5 உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியதாக இந்த உறுப்பினர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

டலஸ் அழகப்பெரும, பிரசன்ன ரணதுங்க, விதுர விக்ரமநாயக்க, ஜனக பண்டார தென்னக்கோன் மற்றும் தனசிறி அமரதுங்க ஆகியோருக்கு எதிராக இவ்வாறு ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறும் வகையில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் மாநாட்டில், ஒழுக்காற்று விசாரணை குறித்த யோசனை முன்வைக்கப்படவுள்ளது.

இந்த யோசனைக்கு கட்சியின் மத்திய செயற்குழுவும் நிறைவேற்றுக்குழுவும் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# பிரசார நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபடுவாரா?

அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரங்களின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசாரங்களுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்குவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலின் போது, கட்சிக்கு ஜனாதிபதி தலைமை தாங்காமை காரணமாக ஐக்கிய தேசியக்கட்சி வெற்றிபெற்றமை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.இதனையடுத்து மைத்திரிபால சிறிசேன கட்சி தலைமையில் இருந்து விலகவேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

இந்தநிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்களின் போது, ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கா? அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கா? தலைமை தாங்குவார் என்று இதுவரை எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை. (இ-7)

# ஜனாதிபதி மைத்திரியிடம் மன்னிப்புக்கோரிய விமல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மன்னிப்பு கோரியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இதன்போது தாம், தேர்தல் காலத்தில் ஜனாதிபதி தொடர்பில் பயன்படுத்திய வார்த்தைகளுக்காக விமல் வீரவன்ச, மைத்திரிபாலவிடம் மன்னிப்பை கோரினார்.

எனினும் இதற்கு பதிலளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போனவை போனவையாக இருக்கட்டும் என்று குறிப்பிட்டார். அத்துடன் தாம் எதிரிடை அரசியலை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்தக்கூட்டம் நேற்று முன்தினம் காலை 8.45 அளவில் ஆரம்பமானது. இதன்போது விமல் வீரவன்சவுடன் தினேஸ் குணவர்த்தன மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் சென்றிருந்தனர்.

இந்தநிலையில் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த விமல் வீரவன்ச, தேசிய அரசாங்கத்தை அமைப்பது என்பது எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.(இ-7)

## வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சிங்கபூரிற்கு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணயத்தாள்களை கொண்டு செல்ல முயன்ற இருவரை கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 71 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்தில் இராகலை மற்றும் வத்தளை பகுதிகளைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கம்மன்பிலவின் உரைக்கு நாடாளுமன்றில் எதிர்ப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று நாடாளுமன்றில் கன்னி உரையாற்றும்போது சில உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ள னர.

அவர், நாடாளுமன்றத்தின் சட்டத்திட்டங்களை மீறும் வகையில் ஆயுதங்கள் ஏந்துதல், நாட்டைப் பிளவுபடுத்தல் தொடர்பில் கருத்து வெளியிட்டமையினாலே இந் நிலைமை உருவாகியுள்ளது.

உறுப்பினர்கள் சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவித்து கருத்து வெளியிட்ட சந்தர்ப்பத்திலே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இத்தற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியிருந்தார்.

ஆயுதம் ஏந்துதல் குறித்து பேசநிலையியற் கட்டளைகளின் அடிப்படையில் இடமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் கம்மன்பிலவின் உரையை நிறுத்திக்கொள்ள நேரிட்டது.குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந்தமை பாராட்டுக்குரியது என உதய கம்மன்பில தெரிவித்திருந்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் சபாநாயகர் கரு ஜயசூரிய, உதய கம்மன்பிலவின் உரையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (இ-7)

# தேர்தல் பிரசார விளம்பரச் செலவுகளை வெளிப்படுத்துவதற்கு சட்டம் வேண்டும்

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

தேர்தல் பிரசார விளம்பர செலவுகளை வெளிப்படுத்தும் வகையில் சட்டமொன்று அறிமுகம் செய்யப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் தேர்தல்களின் போது இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒளி, ஒலிபரப்பு மற்றும் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கான கட்டண விபரங்களை வெளியிடும் வகையில் சட்டமொன்று அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

இலத்திரனியல் ஊடகமொன்றில் பிரசார விளம்பரம் ஒன்று ஒளி, ஒலிபரப்புச் செய்யப்படும் ஒவ்வொரு தடவையும் அதற்கான கட்டணத்தை வெளியிட வேண்டும்.

அச்சு ஊடகங்களில் பிரசுரம் செய்யும் போதும் இவ்வாறு கட்டண விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

தேர்தல்களின் போது சில வேட்பாளர்கள் பாரியளவில் பணத்தை செலவிட்டு விளம்பரம் செய்யும் அதேவேளை, சிலர் பணமின்றி விளம்பரங்களை செய்வதில்லை.

தேர்தல் பிரசாரங்களுக்காக செலவிடப்படும் பாரியளவு தொகை விரயமாக்கப்படுவதாக சில அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.



எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் தேர்தல்களின் போது தேர்தல் பிரசார விளம்பரங்கள் தொடர்பில் சில சட்டங்களை அமுல்படுத்த வேண்டிய அவசி யம் எழுந்துள்ளது.

இது தொடர்பிலான உத்தேச சட்ட யோசனை ஒன்றை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகர சபை சைவசமய விவகாரக் குழுவின் 2015-ம் ஆண்டுக்கான 'யாழ் விருது' பெறும் பேராசிரியர் க.தேவராசா...



கன்னலும் தேனும் பாலும் சுவைப்பாகும்
உன்னருந்
சேவை போல் இனிக்காதென்று
கண்டு
நன்னகர் யாழ்ப்பாண மாநகர சபைச்
சைவசமய
விவகாரக் குழு வியந்தனர்
போற்றினர்
உன்னதமான யாழ்விருதளித்து மகிழ்ந்த
னர் உலகுள்ளளவும்
உன்புகழ் நிலைக்க உயர்ந்தோர்
வாழ்த்தினர் வாழி !
உன்னரிய சமூகசமயப்பணிகண்டு வாழ்த்
தினோம் வேந்தனே
பெருமகனே தேவராசா மேலும்
பணிகள் பலபுரிந்து நீடு வாழி வாழி !

உன்னரும் சமூக சைவப் பணிகள் கண்டு
யாழ் மண்
மகிழ்ந்தது வாழி ! சைவ உலகம்
மகிழ்ந்தது வாழி !
உன்னத பணிகளால் உயர்ந்தனை வாழி
பெற்றோர்
மனங் குளிர்ந்தனர் வாழி !
இணுவையம்பதியும் மகிழ்ந்தது பிறந்த
பொன்னாடும் பெருமையுற்றது இணுவைப்
பொது நூலகமும்
திருநெறிய தமிழ் மறைக் கழகமும்
மகிழ்ந்தது
பொன்மகன் தேவராசா சமூக சைவத்
தொண்டன்
காலமெல்லாம் கற்பகமாய் நிலைத்து
வாழி ! வாழி !! வாழி !!!

ஆக்கம் :
திருமதி வை.கணேசபிள்ளை
கலாபூசணம், பண்டிதை.

வாழ்த்துவோர் :
இணுவையூர் மக்கள்,
இணுவில் பொது அமைப்புக்கள்.

யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவினரால் சமய, கல்வி, சமூக சேவையை கௌரவித்து 2015 ஆம் ஆண்டுக்கான யாழ் விருது பெறும் பேராசிரியர் க.தேவராசா அவர்களை பாராட்டி வழங்கிய வாழ்த்துப்பாமாலை.

தாவில் சிறப்புடைய தாவடிப்பதி சிறக்கக் கந்தையா
அன்னம்மா தம்பதிகள் தவத்திற் பெற்றமகன்
தேவராசா பேராசிரியன் பெருந் தொண்டன் பெருமை
பலவுள்ளான் சைவ நெறிக்காவலன்
கோவில் பல நிறைந்த பேரிணுவைப் பதி புகுந்தான் பெருமை
சேர்த்தான் இணுவிலுக்கே சொந்தமானான்
காவலரும் பாவலரும் போற்றும் பண்புடையான் இலங்கிடும்
இணுவை இளைஞர்களைக் கவர்ந்து சேவை கொண்டான்
வாழி ! வாழி !! வாழி!!!



## வாழ்க வளமுடன்

பேராசிரியர் க.தேவராசா அவர்களின் கல்வி.சமய, சமூகச், சேவையை கௌரவிக்கும் முகமாக யாழ்.மாநகர சபை சைவ சமய விவகார குழுவினரால் வழங்கப்படும் 2015 துக்கான யாழ் விருது.

பெறுபவர் பேராசிரியர் **க.தேவராசா.** இவ் விழாவில் பேராசிரியரின் அனைத்து அன்பு உள்ளங்களையும் கலந்து கௌரவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

– இணுவில் பொது அமைப்புக்கள்

**இடம் :- நாவலர் கலாசார மண்டபம்**
**காலம் :- இன்று (02.09.2015) புதன்கிழமை காலை 9.00 மணி**

**குறிப்பு - இணுவில் ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் கோவிலிருந்து இலவசமாக விக்னேஸ்வரா போக்கு வரத்து வாகனம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.**

K.T.C கோண்டாவில்

## நல்லைக்குமரன் மலர்-2015 23 ஆவது வெளியீட்டு விழா

| | |
|---|---|
| காலம் : | 02.09.2015 இன்று புதன்கிழமை காலை 9.00 மணி |
| இடம் : | நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| தலைவர் : | திரு.செ.பிரணவநாதன் (சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளரும்) |
| பிரதம விருந்தினர் : | திரு.அ.பத்திநாதன் (பிரதம செயலாளர், வடமாகாணம்) |

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| 09.00-09.05 | இறைவணக்கம் |
| 09.05-09.10 | வரவேற்புரை-திரு.பு.ஆறுமுகதாசன் (செயலாளர், சைவ சமய விவகாரக் குழு) |
| 09.10-09.15 | தலைமையுரை |
| 09.15-09.45 | ஆசியுரை<br>1. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)<br>2. சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் (பீடாதிபதி, வீணாகான குருபீடம்)<br>3. ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் (வதிவிட ஆச்சாரியார், சின்மயாமிஷன், யாழ்ப்பாணம்)<br>4. செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை) |
| 09.45-09.50 | பிரதம விருந்தினர் உரை |
| 09.50-10.00 | கௌரவிப்பு, யாழ்.விருது வழங்கலும் பொற்கிழி வழங்கலும் பேராசிரியர் க.தேவராஜா அவர்களுக்கு |
| 10.00-10.10 | ஏற்புரை |
| 10.10-10.20 | மலர் வெளியீட்டுரையும் வெளியீடும் திரு.ந.விஜயசுந்தரம் (கௌரவ பதிப்பாசிரியர்) முதற் பிரதி பெறுவோர்- தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் |
| 10.20-10.40 | ஆய்வுரை பேராசிரியர் தி.வேல்நம்பி (பீடாதிபதி, வணிகத் துறை யாழ்.பல்கலைக்கழகம்) |
| 10.40-10.50 | விசேட பிரதிகள் வழங்கல் |
| 10.50-11.00 | பரிசளிப்பு-பண்ணிசைப் போட்டி, பேச்சுப் போட்டி, சிறுகதைப் போட்டி-2015 |
| 11.00-11.05 | நன்றியுரை- திரு நா.இரகுமார் (பொருளாளர் , சைவ சமய விவகாரக்குழு) |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சைவ சமய விவகாரக்குழு,யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**




















**Santh Texliles**
No.157, 158 Modern MarKet, (Power House Road) Jaffna.

**புதிய உயர் கல்லூரி**
யாழ்ப்பாணம்.

க.ஜெயக்குமார்
**T.J.A.L சுப்பர்மார்க்கட்**
இணுவில் மேற்கு, கந்தசுவாமி கோவிலடி

பேராசிரியரின் மாணவன்
கவிஞர் சக்திதாசன் (டென்மார்க்)

**கங்கை பிறிண்டேர்ஸ்**
V.தயாபாலன் (ஆசிரியர் யாழ்.இந்துக்கல்லூரி)

பேராசிரியரின் மாணவன்
பு.சுரேஸ் (B.com) கனடா.

**Science world**
**Jaffna.**
மு.சண்முகம் (வர்த்தகர்)
இணுவில்.

**Science Hall**
**Jaffna.**
அண்ணா தொழிலகம்
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்துங்கள்

ஊடகவியலாளர் பீரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம் பெற வேண்டும் என்பதோடு இதில் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு உரிய சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்பட வேண்டும். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரபலங்களை காப்பாற்றுவதற் காக கடந்த காலங்கள் போல் குறித்த சம்பவத்திற்கும் புலிச்சாயம் பூசப் பட்டு விசாரணைகள் முடக்கப்படுமாயின் அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி போராட்டங்களை முன்னெடுப்பதோடு சர்வதேச ரீதியிலும் இதற்கான தீர்வினை பெற தயங்கப்போவது இல்லை என ஊடக சுதந்திரத்திற்கான செயற்பாட்டுக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பிலான விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று ஊடக சுதந்திரத்திற்கான செயற்பாட்டு குழுவினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இக் குழுவின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடக சுதந்திரத்திற்கான செயற்பாட்டு குழு, ஊழியர் சங்கங்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த பிரதிநிதிகள், முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம் பெறவேண்டும் என்ற கோரிக்கையை முன்னிலைப்படுத்தியே இந்த ஊடகவியலாளர் சந்திப்பை நாம் முன்னெடுக்கின்றோம்.

முன்னைய அரசாங்கத்தின் கீழ் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட உட்பட பல ஊடகவியலாளர்கள் மற்றும் வர்த்தகர்கள், அன்றைய அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டவர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதோடு கப்பம் பெறப்பட்ட சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளன. அந்தவகையில் இது தொடர்பிலான விசாரணைகளின் போது இதில் தொடர்புடைய பிரபலங்களை காப்பாற்றும் முகமாக குறித்த சம்பவங்களுக்கு புலிச்சாயங்கள் பூசப்பட்டு விசாரணைகள் முற்றுமுழுவதுமாக ஒடுக்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதியின் குடும்ப ஆட்சிக் காலத்திலேயே இவ்வாறான சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டன. இது தொடர்பில் சர்வதேசமும் அறிந்திருந்தது. அந்த வகையில் சர்வாதிகார கொடுங்கோல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவே கடந்த ஜனவரி மாதம் மூவின மக்களும் ஒன்று சேர்ந்து நல்லாட்சியை ஸ்தாபித்தனர். அந்த வகையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசமான செயற்பாடுகள் தொடர்பில் இன்றைய நல்லாட்சி அரசு உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுத்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும். இன்று பிரதீப் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதுவரையில் இராணுவத்தை சேர்ந்த நான்கு பேர் குற்றப்புல னாய்வு பிரிவினரினால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சடடத்தின் கீழ் விசாரிக் கப்பட்டு வருகின்றனர். குறித்த சம்பவம் தொடர்பில் முன்னாள் பிர தம நீதியரசரிடமும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது இச்சம்பவத்துடன் தொடர்புடைய பிரபலங்களை காப்பாற்றும் முகமாக இதற்கு புலிச்சாயம் பூசப்பட்டு அனைத்து விசாரணைகளும் முடக்கப்பட்டன. அவ்வாறே பிரதீப் எக்னெலிகொட தொடர்பிலான சம்பவத்தில் உண்மைகளை மறைத்து விசாரணைகளை முடக்குவதற்கு அவருக்கு புலிச்சாயம் பூசப்படுவதோடு அவருடைய ஆன்மாவுக்கும் பூசப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பில் இன்று சர்வதேசமே விழித்துள்ளது. அந்தவகையில் இது தொடர்பிலான விசாரணைகள் முடக்கப்படுமாயின் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் வெடிக்கும்.

எனவே நல்லாட்சி அரசாங்கமானது முன்னைய அரசாங்கத்தின் கீழ் பிரதீப் எக்னெலிகொட உள்ளிட்ட ஏனைய ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு கொல்லப்பட்டமை மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர். (இ-7)


## டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.

☀ பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 077 5925088,
021 222 8680

(C-1812)



## PATRICIAN INSTITUTES
## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:07.09.2015**

**I. Computer course**

A. Information & Communictication Technology (ICT) — Duration 4 months
(O/L மாணவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்படுகின்றன)
B. Advanced in Computer Programming — Duration 8 months
C. Diploma in Microsoft Office — Duration 4 months
D. Diploma in desk top Publishing — Duration 4 months
E. Diploma in Video Editing — Duration 4 months
F. Diploma in Type Setting — Duration 6 months
G. Diploma in Computerized Accounting — Duration 4 months
H. Diploma in Software Engineering — Duration 4 months
I. Diploma in Micro media — Duration 6 months
J. Diploma in Web Multimedia — Duration 4 months
K. Professional Diploma in Graphic Design — Duration 4 months
L. Computer Hardware Technology — Duration 4 months
M. Internet & Email — Duration 3 months
N. General Information Technology (GIT) — Duration 4 months

(கணனி பயிலும் மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில தட்டெழுத்து (ENGLISH TYPING) தமிழ் தட்டெழுத்து (TAMIL TYPING) இலவசமாக கற்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

II. Short Hand Typing (English)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) — Duration 6 months
கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்

III. Short Hand Typing (Tamil)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) — Duration 6 months
கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்

IV. Gentral motor Mechonism
(Petrol & Diseal வாகனங்கள், மோட்டார் வாகனம் திருத்துதல்) — Duration 6 months

V. Gentral Electrician (Wiring & Re-Winding)
ஜெனரல் எலக்ரிஸன் மின்சார இணைப்பு
மோட்டார் றிவைண்டிங் — Duration 6 months

VI. Lathe Machine Operation (Milling & Machine, Shaping Machine
என்பன கற்றுக்கொடுக்கப்படும்)
(கடைச்சல் இயந்திரம் பயிற்சி) (On the Jop Training வழங்குதல்) — Duration 6 months

VII. Carpentery (With use of Machinery மரவேலை
(On the Jop Training வழங்குதல்) — Duration 6 months

VIII. Refrigeration and Air Conditioning — Duration 6 months

IX. Motor Cycle Mechanism — Duration 6 months

குறிப்பு: 1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்
2. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
**Registrar, Patrician Institutes**
**61, (59), St.Patrick's Road, Jaffna.**
**T.P. - 021 222 6148, Fax: 021 222 6148**
**E-mail : Patricianjaffna@yahoo.com**

(C-1990)


## ராசி பலன்

02.09.2015
(ஆவணி 16, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 3.48 மணிவரை
ரேவதி முற்பகல் 10.30 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
சங்கடகர கணபதி விரதம்
சமநோக்குநாள்வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது சந | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம், உத்தரம்<br>காலை 10.20 இற்கு<br>மேடம் -சந் | | செவ் சுக |
| | | | குரு சூரி |
| | | சனி | புதன் ராகு |

**மேடம்:** கணபதி வழிபாட்டால் இன்பம் காண வேண்டியநாள், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பணியில் சிறுமன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்:** பக்குவமாக பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயல்ஒன்றையும் செய்து காட்டுவீர்கள், தன வரவுகள் திருப்திகரமாக அமையும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், திடீர் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வருங்காலத்திற்கான புதிய திட்டமொன்றைக் தீட்டுவீர்கள், வீட்டை அழகுபடுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில்குறை கண்டு கூறலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம்.

**துலாம்:** வெளியூர்பயணத்தால் ஆதாயம் கிடைக்கலாம், உறவினர்களின் வருகையுண்டு, வழிபாட்டில் முன்னேற்றம் காண வேண்டிய நாள், பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்துமுடிப்பீர்கள், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், வாகன சுகமுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கும்பம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், குடும்ப பொறுப்புக்கள் கூடும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவைத் தரும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34 சுகாதாரத் தொண்டர்கள் நியமனம் கோரி போராட்டம்

(கொழும்பு)

**தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சுகாதாரத் தொண்டர்களாக பணிபுரிந்து வருகின்ற 34 சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் கோரி மீண்டும் தொடர் போராட்டத்தினை நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளனர்.**



நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை தொடர் போராட்டம் முன்னெடுக்கப் போவதாகவும் இல்லையேல் உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் சுகாதாரத் தொண்டர்கள் நேற்றைய தினம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றி வருகின்ற குறித்த சுகாதாரத் தொண்டர்கள் கடந்த 2014ஆம் ஆண்டு 6மாதகால ஒப்பந்த அடிப்படையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

6மாத காலம் முடிவுற்ற நிலையில் மீண்டும் 6மாதகாலம் இரண்டாவது ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

இரண்டாவது ஒப்பந்தம் கடந்த ஆடி மாதம் 17ஆம் திகதி முடிவுற்ற நிலையில் அவர்களை பணியிலிருந்து விலகுமாறு சம்மந்தப்பட்ட தரப்பினால் கோரப்பட்டது. இதனையடுத்து அன்றையதினம் தமக்கு நிரந்தர நியமனம் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரி ஊடாக எந்தவொரு பதிலும் இதுவரை கிடைக்கப்படவில்லை எனவும் தொடர்ச்சியாக தாம் ஏமாற்றப்பட்டு வருவதாகவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த சுகாதாரத் தொண்டர்களுக்கான 2 மாதகால சம்பளக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

இதனையடுத்தே நேற்றைய தினம் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் தமக்கு சம்பளத்தை விட நிரந்தர நியமனமே முக்கியம் என அவர்கள் இப்போராட்டத்தில் தெரிவித்துள்ளனர். (இ-5-25)

## இசைப்பேருரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவகாலத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் கந்தபுராண தொடர் இசைப் பேருரை தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை சூராதியவுணர் தோற்றம் எனும் கந்தபுராண தொடர் இசைப்பேருரையினை நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சி.வை.நித்தியானந்தா சர்மா வழங்கவுள்ளார். (இ-5)

## மண்டல மாநாடுகள்

(யாழ்ப்பாணம்)

இயேசுவைப் போல் நடந்து கொள்ளுங்கள் என்ற தொனிப் பொருளில் மூன்று நாள் கொண்ட மண்டல மாநாடுகள் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை மறுதினம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 3நாட்கள் நடைபெறவுள் ளன.

இந்நிகழ்வுகள் மூன்று தினங்களும் காலை 9.20மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.50 மணி வரை நடைபெறவுள்ளன.

4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு ஞானம் எனும் பொக்கிஷம் அவருக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்ற முக்கிய பேச்சும் பிற்பகல் 3.20 மணிக்கு இயேசுவையே எஜமானராகவும் கிறிஸ்துவாகவும் கடவுள் நியமித்தார் என்ற நாடகமும் நடைபெறவுள்ளன.

5ஆம் திகதி சனிக்கிழமை மூன்று தொடர் பேச்சுகளும் பிற்பகல் 3.20 மணிக்கு இதற்காகவே இந்த உலகிற்கு வந்தேன் என்ற ஓடியோ நாடகமும் இடம்பெறும்.

6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.20மணிக்கு இயேசு கிறிஸ்து உலகத்தை ஜெயிப்பவர் எப்போது? எப்படி? என்ற பேச்சும் பகுதி II நாடகமும் இடம் பெறும்.

முற்றிலும் இலவச அனுமதியுடன் நடைபெறவுள்ள மேற்படி மண்டல மாநாட்டுக்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (இ-5)

## காந்தி அப்பு காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்ணின் மிகவும் மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர் என்ற பெருமைக்குரிய காந்தி அப்பு எனப்படும் கணபதி காதி கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது 113 ஆவது வயதில் காலமானார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவாலி கிராமத்தைச் சேர்ந்தவரான இவர் இலங்கையின் மிக மூத்தவர்களில் ஒருவராக கடந்த 2014ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டு தேசிய முதியோர் செயலகத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இதற்கமைய இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் பாடல்-மாணிக்கம் யோகேஸ்வரன் (லண்டன்), வயலின்-அ.ஜெயராமன், கீபோர்ட்-ந.செல்வச்சந்திரன், மிருதங்கம்-க.கண்ணதாஸ், தபேலா-சதாவேல்மாறன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (இ-5)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமியினால் வழங்கப்பட்டு வருகின்ற ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணி தொடக்கம் 8மணி வரை நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் வாசிப்போம் நேசிப்போம் எனும் ஆன்மீக அருளுரை இடம்பெறும். (இ-5)

## சங்கடஹர சதுர்த்தி

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி விரதம் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதன்போது மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெறவுள்ளன. (இ-5)

## அருள் நெறி விழா

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தி வருகின்ற யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று புதன்கிழமை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை யாழ்ப்பாணம் பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் திருமதி ந.கலையமுதா நிகழ்த்தவுள்ளார்.

கலை நிகழ்வுகளாக ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை மத்திய பிரிவு மாணவர்கள் வழங்கும் குழுநடனம், ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் பண்ணிசை, கைலாசநாத வேத சிவாகம அறநெறிப்பாடசாலை மத்திய பிரிவு மாணவர்கள் வழங்கும் வில்லிசை, துரவடிப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை கீழ்ப்பிரிவு மாணவர்கள் வழங்கும் நாடகம், தென்மட்டுவில் வேரவிற்கேணி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் சி.அபர்ணா, சி.உமாகாந்தன் ஆகியோர் வழங்கும் தனி நடனம், இலக்கண சுவாமி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் தே.ஜோகிசா, த.பூர்விகா, வ.தனுசிகன், த.தமிழினி, இ.சுபிலா, க.டயானா ஆகியோர் வழங்கும் பேச்சு, சைவ சமய விருத்திச்சங்க அறநெறிப் பாடசாலை மாணவி ச.வைஸ்ணவி- பேச்சு என்பன இடம்பெறவுள்ளன. (இ-5)





## நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா இன்று

நல்லைக்குமரன் மலர் 23வது வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளருமான செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சைவசமய விவகாரக்குழு செயலாளர் பு.ஆறுமுகதாசன் வரவேற்புரை நிகழ்த்துவார். ஆசியுரைகளை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குருபீட பீடாதிபதி சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள், யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மலரின் பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் மலர் வெளியீட்டுரையையும் மலர் வெளியீட்டையும் நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறை பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி மலரின் ஆய்வுரையை நிகழ்த்துவார். (இ-3)

## பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள்

## திருத்தங்களுக்கான கோவைகளை இனிமேல் யாழ். மாவட்ட செயலகத்தில் சமர்ப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வதியும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தமது பிறப்பு, இறப்பு சான்றிதழுக்கான பதிவுகள் மற்றும் திருத்தங்களுக்கான கோவைகளை இனி யாழ். மாவட்டத்திலேயே சமர்ப்பிக்கலாமென வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் ஜே.ஆனந்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண உதவிப்பதிவாளர் நாயகம் கிழக்கு மாகாணத்திற்கும் பதில் கடமை ஆற்றுவதனால் வடமாகாணத்தில் வதியும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தமது பிறப்பு, இறப்பு சான்றிதழுக்கான பதிவுகள் மற்றும் திருத்தங்களுக்கான கோவைகளை யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினூடாக சமர்ப்பிக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## வேட்கை ஒருமுகப்படுத்தல் செயற்றிட்டம் விரைவில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நல்லின மாடுகளை அதிகரிக்கும் நோக்குடன் வேட்கை ஒருமுகப்படுத்தல் எனும் புதிய செயற்றிட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கால்நடை மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் சி.வசீகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் நல் லின மாடுகளை அதிகரிக் கும் நோக்கில் இனப்பெருக் கம் செய்யாத மாடுகளை தெரிவு செய்து மருத்துவ சிகிச்சை மேற்கொண்ட பின் செய்கை முறை சினைப்படுத்தலை மேற்கொள்ளவுள்ளோம்.

இத்திட்டமானது முற்று முழுதாக இலவசமாக வழ ங்கப்படவுள்ளதோடு தற் போது இத் திட்டத்திற்கான மருந்து கள் கொள்வ னவு செய்யப் பட்டு வருவ தாக அவர் மேலும்தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





யாழ்.மாநகர சபை இந்து சமய
விவகாரக் குழுவின்
இவ்வாண்டிற்கான யாழ்.விருது
பெறும் பேராசிரியர்

**க.தேவராஜா, JP**

(தலைவர், வணிகத்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

போசகர்-இணுவில் பொதுநூலகம்,
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் அறநெறிப்பாடசாலை,
திருநெறிய தமிழ் மறைக்கழகம்.
அவர்கள் மென்மேலும் பல சிறப்புக்கள் பெற்று
பல்லாண்டு வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
விநாயக அடியார்கள்,
இணுவில் பொது நூலகத்தினர்,
திருநெறிய தமிழ் மறைக் கழகத்தினர்.

இணுவில்,
ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார்,
கோவிலடி.

---

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்

## பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளிற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**01.பதவி:- களஞ்சிய முகாமையாளர் 208/15 வெற்றிடம் - 01**

சம்பள அளவுத்திட்டம் :-9450-75×10-80×10-11000 (66/2006 இன் படி)

**தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 16வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியொன்றில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளரின் 17 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர்(சாதாரண தரம்)பத்திரம்/ க.பொ.த.(சாதாரண தரத்தில்)2 அமர்வுகளிற்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண் கணிதம்/ தூயகணிதம் அத்துடன் சிங்களம்/தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

✳ கணனி அறிவு விரும்பத்தக்கது.

**02.பதவி:- உதவிக் களஞ்சிய பொறுப்பாளர் 203/15 வெற்றிடம் - 01**

சம்பள அளவுத்திட்டம் :-9450-75×10-80×10-11000 (66/2006 இன் படி)

**தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 16வது சம்பளத்திட்டத்தின் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியொன்றில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர்(சாதாரண தரம்)பத்திரம்/ க.பொ.த.(சாதாரண தரத்தில்)2 அமர்வுகளிற்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண் கணிதம்/தூயகணிதம் அத்துடன் சிங்களம்/தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி.

✳ கணனி அறிவு விரும்பத்தக்கது.

குறிப்பு:-

- ★ விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- ★ சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
- ★ சங்கப்பணியாளர்களுக்கும் சங்க எல்லைக்குட்பட்டவர்களிற்கும் முன்னுரிமை வழங்கப்படும்
- ★ சங்கங்களில் கடமையாற்றுவோர் விண்ணப்பிப்பதாயின் தாங்கள் தொழில் செய்யும் சங்கத்தினூடாக தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
- ★ விண்ணப்பப் படிவங்களினை சங்க அலுவலகத்தில் ரூபா 30/= செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ★ தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பனவற்றை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்க தலைமை காரியாலயத்தில் பெற்றுக் பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்கான விண்ணப்பப் பெயரினைக் குறிப்பிட்டு "பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை வீதி கொடிகாமம்" என்ற முகவரிக்கு 15.09.2015 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**01.09.2015** **பொதுமுகாமையாளர்**

---

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 79 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/1335

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 27 செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: கனடா
தொ.இ: B/1336

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 26
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MSC/ பொறியியலாளர்
தொ.இ: B/1337

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 9
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:, BA/ ஆசிரியர்
தொ.இ: B/1338

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 36 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC/ விரிவுரையாளர்
தொ.இ: G/2046

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 76 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: சித்தவைத்தியர்
தொ.இ: G/2047

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 16 சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: HNDA
தொ.இ: G/2049

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 14
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA/ உதவி விரிவுரையாளர்
தொ.இ: G/2068

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E.mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வரத்தை நூல் வெளியீடு

வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்தும் செவ்வரத்தை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் இலங்கையில் நடத்திய சிறுகதைப் போட்டியில் பங்குபற்றிய 141 சிறுகதைகளில் 50 சிறுகதைகளின் தொகுப்பாக செவ்வரத்தை நூல் விளங்குகிறது.

வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியாவின் முன்னாள் அரசாங்க அதிபரும் கல்வியமைச்சின் ஓய்வு நிலை செயலாளருமாகிய உடுவை தில்லை நடராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

தமிழ் வாழ்த்தினை திருமதி தாட்சாயினி கணேசநாதன், திருமதி கலைவாணி ஏகானந்தராஜா (ஜேர்மனி) ஆகியோர் பாடுவர்.

அறிமுகவுரையினை ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் தமிழ்மணி கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்), வாழ்த்துரையை வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெறும். நூலின் முதற் பிரதியை லண்டனைச் சேர்ந்த விரிவுரையாளர் க.சிறிஸ்கந்தராஜா பெற்றுக்கொள்வார். நூல் ஆய்வினை வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் ந.பார்த்தீபன், சிறப்புரையினை ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கவிஞர், எழுத்தாளர் திருமதி. கலைவாணி ஏகானந்தராஜா ஆகியோர் வழங்குவர்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பரிசில் பெற்றவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெறும். இந்நூல் விற்பனையின் மூலம் பெறப்படும் நிதி இலங்கையில் உள்ள ஆதரவற்ற மாணவர்களின் கல்விக்காக வழங்கப்படும். (2)




# கிணற்றிலிருந்து குடிநீரை பெறுவதற்கு ஊற்றெடுக்கும்வரை காத்திருக்கிறோம்

## பொன்னகர் கிராம மக்கள் ஆதங்கம்



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னகர் கிராமத்தின் முதலாம் கட்டைப்பகுதி மக்கள் நீரின்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.

சுமார் 260 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் குடிப்பதற்கு கூட நீரை பெற்றுக் கொள்வதில் நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த பிரதேசத்தில் உள்ள பொதுக் கிணறு ஒன்றில் நீரை பெற்றுக்கொள்வதற்காக நீர் ஊற்றெடுக்கும் வரை காத்திருந்து நீரைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவல நிலையே காணப்படுகின்றது.

அதிகாலையில் கிணற்றில் ஊறியுள்ள நீரை குடிப்பதற்கு மட்டும் பெற்றுக் கொள்வதுடன் ஏனைய தேவைகளுக்கு காத்திருந்து ஒவ்வொரு குடும்பமும் முப்பது லீற்றர் நீரை மட்டுமே பெற்றுக்கொள்ளும் நிலை தொடர்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மாணவர்கள் காலையில் நீரை பெற்றுக்கொள்ள முடியாமையினால் பாடசாலைக்கு தாமதமாக செல்லும் நிலை தொடர்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர.


அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீரின்மையால் தம் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதாக தெரிவிப்பதுடன் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நீர்த்தாங்கிகள் மூலம் நீர்விநியோகிக்கப்பட்ட போதும் தற்போது அது இடை நிறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபைக்கு அறிவித்தும் எந்தவிதமான நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

எனவே தங்களின் இந்த அவசர நெருக்கடியினை புரிந்து கொண்டு விரைவில் தமக்கு குடிநீர் உள்ளிட்ட நீர்த்தேவையை பூர்த்தி செய்ய வழிவகுக்குமாறு உரியதரப்புகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-283)

# பால் விற்பனை நிலையத்தின் குறைபாடுகளை கேட்டறிந்தார்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர்




(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால் கொள்வனவு விற்பனை நிலையத்திற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோர் அண்மையில் விஜயம் மேற்கொண்டு அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். இதன்போது சங்கத்தின் பொது முகாமையாளர் நிலையக் குறைபாடுகளை எடுத்துக் கூறினார்.

அவர் கூறுகையில்,

2012 ஆம் ஆண்டு யு.என்.டி.பி நிறுவனத்தால் சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பாலை குளிரூட்டி பதனிடும் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் இவ்வியந்திரத்தை இயக்குவதற்கு 3 அவத்தை (திறீபேஷ்) மின்சாரம் தேவைப்பட்டது.

இது குறித்து தேவையான மின்சார வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கு முல்லைத்தீவு மின்சார சபையினரை சங்கத்தினர் நாடிய போது குறித்த மின்சார வசதியினை பெற்றுக்கொள்வதற்கு மூன்று மில்லியன் ரூபா முதலில் செலுத்த வேண்டுமென கூறினார்.

இந்த நிதி வசதி இன்மை காரணமாக தொடர்ந்து இவ்வியந்திரத்தை உபயோகிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையில் இந்த பால் கொள்வனவு விற்பனவு நிலையத்திற்கு அண்மையில் வருகைதந்த யு.என்.டி.பி.அதிகாரிகள் இவ்வியந்திர த்தை இவ்வளவு காலமாகியும் உப யோகிக்காத காரணத்தினால் மீள எடுத்துச் செல்லபபோவதாகக் கூறிச் சென்றனர்.

மேலும் கூட்டுறவுப் பணியாளர்களிற்கு ஏனைய சங்கங்களில் 30 விகித சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ள போதிலும் தமது பணியாளர்களிற்கு இன்றுவரை இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இக்குறைபாடுகளை கேட்டறிந்து கொண்ட விவசாய அமைச்சர் விரைவில் நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார். தொடர்ந்து பொது முகாமையாளர் கூறுகையில், இந்நில்லயம் ஊடாக நாள் ஒன்றிற்கு சுமார் இரண்டாயிரம் லீற்றருக்கு குறையாத பாலை கொளவனவு செய்வதாகவும் இதில் நாளாந்தம் 450 லீற்றர் பால் முன்பள்ளி சிறார்களின் பாவனைக்காக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

குறித்த பால் விற்பனை நிலையம் குமுழமுனை கொட்டுக் கிண ற்றடி ஆலயத்திற்கு அண்மையாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2- 302)

## காணி உரிமைப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

கிளிநொச்சியில் காணி உரிமைப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் காணி உரிமைப் பத்திரம் இல்லாதோருக்கு காணி உரிமைப்பத்திரம் வழங்கும் காணிக் கச்சேரிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் பிரகாரம் தொண்டமான் நகர், அம்பாள் குளம் கந்தன்குளம் ஆகிய கிராமங்களில இந்நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இதேபோன்று ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளிலும் இவ்வாறான காணிக்கச்சேரிகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது காணி உரிமையாளர்கள் தொடர்பில் பதிவுகள மேற்கொள்ளப்பட்டு விரைவில வைபவரீதியாக காணி உரிமைப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணி உரிமைப்பத்திரம் இல்லாதோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் வீட்டுத் திட்டம் உட்பட ஏனைய நல உதவித் திட்டங்களைப் பெறுவதிலும் அதிக சிரமங்களை எதிர்கொள்வதைக கவனத்திற் கொண்டே காணி உத்தரவுப்பத்திரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# வீதி செப்பனிடப்படாமையால் இடர்பாடுகளை அனுபவிக்கின்றோம்

## கண்ணகைபுரம் கிராம மக்கள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள கண்ணகை புரம் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கின்ற மக்கள் தாம் குடியிருக்கும் பகுதிக்கான பிரதான வீதி செப்பனிடப்படாமல் காணப்படுவதால் அதனூடாக பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதற்காகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இக் கிராமத்தில் தரம் 5 வரையிலான பாடசாலை இயங்கி வருவதாகவும் மேல் வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் மிகவும் கூடுதலான தூரத்தைக் கொண்ட கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இவ் வீதியூடாகவே சிரமப்பட்டு பயணிக்க வேண்டி இருப்பதாகவும் மாணவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஸ்கந்தபுரம் ஊடாக முக்கொம்பின் வரையும் பேருந்து சேவைகள் நடைபெறுகின்ற போதிலும் ஸ்கந்தபுரம் பிள்ளையார் கோவிலடியில் இருந்து கண்ணகைநகர் கிராமத்திற்கு போக்குவரத்திற்குரிய வீதி புனரமைப்பு செய்யப்படாமையால் பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை.


இந்தக் கிராமத்தில் பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன. இக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இதுவரை குடியிருப்பாளர்களுக்கான மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

எனவே பாடசாலை சிறார்களின் நலன் கருதியும் விவசாயத்தை ஜீவனோபாயமாகக் கொண்ட இப்பகுதி மக்களின் நலனிலும் அக்கறை கொண்டு விரைவில் வீதியை செப்பனிட்டு மின்சார நடவடிக்கையை மேற்கொண்டு குறிப்பிட்ட நேரசூசிக்கு அமைய பேருந்து சேவைகளையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காயில் கறாவல் தோற்றத்தினை அவதானித்தீர்களா?

# தேங்காயில் ஏற்படும் மைற் பீடையினை கட்டுப்படுத்தி விளைச்சலை அதிகரிப்போம்



ஜெ.சத்தியேந்திரன்,
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தென்னைப்பயிர்ச் செய்கைச் சபை,
கிளிநொச்சி.

தென்னையில் பாளைகள் வந்து விரிந்தவுடன் குரும்பட்டிகள் உற்பத்தியாகும்.

கொண் டிருக்கும். அது மட்டுமல்லாமல் தேங்காய் கொப்பறா உற்பத்திகளில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.


டும்.

பின்பு இறுதியில் பாம் ஒயிலைச்சேர்த்து ஒன்றாக்கவும். இதனை ஒரு கைத்தெளி

லினை(பருத்தி) கொட்டின் துணி உதவியுடன் வடிக் கவும். இக்கரைசலினை வேறாக வைக்கவும்.

பின்பு சவர்க்காரத்தினை 5 கிராம் அளவு சீவி எடுத்து அரைக்கப் நீரில் கரைக்கவும். உள்ளிக்கரைசலையும் சவரக்காரக்கரைசலினையும் ஒன்றாகச் சேர்க்கவும். இதன்பின்பு 20மி.லீற்றர் வேப் பெண்ணையையும் அதனுள் சேர்த்து ஒருபோத்தல் நீரில் ஐதாக்கவும். இக்கலவை யினை கைத்தெளிகருவி ஒன்றினுள் இட்டு மரமேறும் ஒருவரிடம் கொடுத்து குரும்ப ட்டியின் எல்லா பருவநிலைக ளுக்கும் படத்தக்கதாக விசிறவும்.

கலவை விசிறுவதற்கு முன்பு குலையிலுள்ள எல்லா



ஏனைய பருவ நிலைகளில் "அசேரியா குரோரோனிஸ்" (Aceria guerreronis) எனும் விஞ்ஞான பெயருடைய மைற் (mite) பீடை தாக்குகின்றது. இது ஆத்திரோபோடா இனத்தின் இனப்பெயர் "இரியோ பைட்" என்னும் பாகுபாட்டைச் சேர்ந்த ஓர் உயிரி ஆகும். தேங்காய் உற்பத்தியில் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தும் பீடை ஆகும். இதனைக் கண்ணினால் பார்க்க முடியாது.

நுணுக்குக் காட்டியால் மட்டுமே பார்வையிட முடியும்.

குரும்பையிலிருந்து தேங்காய்வரை முகிழ்பகுதிக்குள் கூட்டமாக வெள்ளை நிறமாகக் காணப்படும்.

இவை 3-6 மாதங்கள் வரையான தென்னங் குரும்பட்டிகளின் மேற்றோல் இழையங்களை உண்ணுவதனால் தேங்காயின் மேற்பகுதி கறாவல் தோற்றமுடையதாக மாற்றமடைகின்றது.

அது மட்டுமல்லாமல் தேங்காய்களின் பருப்பு உள்ள பகுதியும் சிறியதாக மாற்றமடையும்.

மைற் தாக்கத்தின் தீவிர நிலையில் தேங்காய்கள் முதிர்வடையாமலே மரத்திலிருந்து விழும்.

இப்பீடை காற்றினால் பரம்பலடைகின்றது. தாக்கத்தின் தீவிர நிலையில் தேங்காயின் வெளிப்புறத் தோலில் ஆழமான வெடிப்புக்கள் தோன்றி. விரும்பத்தகாத வடிவத்தினைக்

மைற் பரம்பலினைக்குறைத்து சேதத்தினைக் கட்டுப்படுத்தும் முக்கியமான இரு வெவ்வேறான கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துகின்றோம்.

இயற்கை நாசினி களைக் கொண்டும் நவீன முறையிலான உயிரினவியல் கட்டுப்பாடு மூலமும் கட்டுப்படுத்தலாம்.

இயற்கை நாசினி முறை-1.

சல்பர்-பாம் ஒயில் அல்லது மரக்கறி எண்ணை கலவை விசிறல்.

**ஒரு லீற்றர் கலவை தயாரிக்கத் தேவையான பொருட்கள்.**

1.பாம் ஒயில் - 200 மி.லீற்றர்.

2.நீர் 800 மி.லீற்றர்

3.சவர்க்காரத்தூள் -12 கிராம் (2 மேசைக்கரண்டி )

4.கந்தகம் ( சல்பர்)-(ஒரு மேசைக்கரண்டி)

(நீரில் கரையக்கூடியது)

**தயாரிக்கும் முறை**

நீரில் சவர்க்காரத்தூள். கந்தகம் என்பவற்றினை நன்றாகச் சேர்த்து கரைக்க வேண்

கருவியில் விட்டு மரமேறும் ஒருவரிடம கொடுத்து வட்டில் எல்லா குரும்பைகளுக்கும் தேங்காய்களுக்கும்

**தெங்கு தினம் இன்று இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

விசிறச் செய்யவும்.

**இயற்கை நாசினி முறை 2:**

**தேவையான பொருட்கள்.**


வெள்ளைப்பூடு (உள்ளி) 20 கிராம் . அரைகப்நீர்

சவர்க்காரம் 5 கிராம். அரை கப்நீர்

வேப்பெண்ணை 20 மி.லீற்றர்.

**தயாரிக்கும் முறை**

முதலில் வெள்ளைப்பூண்டினை தோலுரித்து கிரைண்டர் அல்லது அம்மியில் இட்டு அரைக் கப் தண்ணீர் விட்டு நன்றாக அரைக் கவும். பின்பு அக்கரைச



பருவ நிலையிலுமுள்ள காய்ந்த குரும்பட்டிகளை வெட்டி அப்புறப்படுத்தவும்.

**உயிரினவியல் கட்டுப்பாடு.**

**மைற் தாக்கத்திற்கு** "பராககி" எனும் உயிரியை

விடுதல்.

தென்னை அசேரியா மைற்றினைக் கட்டுப்படுத்த உயிரினவியல் ரீதியாக இரைகௌவியான "நியுசிலஸ் பராக்கி" (Neosilous barakki) என்னும் உயிரியை இன விருத்தி செய்து பொலித்தீன் பைக் கற்றுகளில் அடைக்கப்பட்டு தென்னைச்செய்கையாளர்க ளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

4 மரத்திற்கு ஒரு பைக்கற் என்ற அளவில்ஏக்கருக்கு 16 பக்கற் றுகள் தேவைப்படும்.

இப்பக்கற்றிலுள்ள "பராக்கி" எனும் உயிரியினை வெயில் அதிகமாகவுள்ள நேரத்தினைத்தவிர்த்து மாலை நேரங்களில் தென்னந் தோட்டங்களில் 4 மரத்திற்கு ஒரு பக்கற் என்ற அளவில் மரத்தில் ஏறி வட்டுப்பகுதியில் பக்கற்றின் மூலைப் பகுதியினை வெட்டி தடித்துண்டால் தட்டி விடவும்.

இவ் இலகுவான முறை யின் மூலம் மைற்றினைக்கட்டுப்படுத்த முடியும்.

குறிப்பு: இவ் இரைகௌவி பக்கற்றுகள் தேவையானோர்.

ஒவ்வொரு புதன்கிழமையிலும் அவ்வப்பகுதியிலுள்ள கமநல சேவை நிலையத்தில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை. தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரைச் சந்தித்து பெற்றுக் கொள்ளமுடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1229

# நீண்ட தாடி!



முன்னொரு காலத்தில் போர் வெறி பிடித்த மன்னன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் அக்னிமா.

அண்டை நாடுகளைத் தனது குரூரமான படையெடுப்பின் மூலம் தாக்கி வந்தான்.

ஒருமுறை, ஷகில் என்பவருக்குச் சொந்தமான நகரத்தைத் தனது படைகளோடு சென்று தாக்கி அந்த நகரத்தை ஆக்கிரமிக்க நினைத்தான் அக்னிமா.

மூன்று நாட்களுக்குள் குடிமக்கள் அனைவரும் சரணடையவில்லையென்றால், நகரத்தைச் சூறையாடப் போவதாக எச்சரித்து, கெடு வைத்தான்.

ஷகில் ஆலோசகர்களின் சபையைக் கூட்டி ஆலோசனை செய்தார்.

எனினும் அங்கிருந்தவர்களுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை.

கெடு வைத்த கடைசி நாளன்று பழைய மென்மயிர்த் தோல் கோட்டணிந்த சிறுவன் ஒருவன் ஒரு கழுதைக் குட்டியின் மீது ஏறி, சபைக்கு வந்தான்.

அவன் ஷகிலையும், மற்றவர்களையும் பவ்யமாக வணங்கி, "என்னை தூதுவனாக அனுப்புங்கள். எதிரியின் முற்றுகையிலிருந்து நகரத்தை விடுவிக்க நான் முயற்சி செய்கிறேன்," என்று வேண்டிக் கொண்டான்.

சபையோர் ஆச்சரியப்பட்டனர். வேறு வழியின்றி சம்மதத்திற்கு அடையாளமாகத் தலை அசைத்தனர்.

அச்சிறுவன் மிகவும் வயதான ஒரு கிழட்டு ஒட்டகமும், "மிக நீண்ட தாடியுடைய வெள்ளாட்டுகிடாவும் வேண்டுமென்று கேட்டான். அங்கிருந்தவர்களுக்கு, இது வியப்பாக இருந்தாலும் அவன் கேட்டதை கொடுத்தனர். வெள்ளாட்டின் கழுத்தில் கயிற்றைக் கட்டி அதை ஒரு கையில் பிடித்தபடி, ஒட்டகத்தின் முதுகில் அமர்ந்து சவாரி செய்த சிறுவன், எதிரியின் முகாமை வந்தடைந்தான்.

சிறுவனைப் பார்த்ததும், அக்னிமா கடுங்கோபம் கொண்டான்.

"ஷகிலின் ராஜ்ஜியம் முழுவதிலும் வயதான நீண்ட தாடியுடைய தூதுவர்கள் யாருமே இல்லையோ? சிறுவனான நீ வந்திருக்கிறாயே?" என்று மிகவும் சினத்தோடு வினவினான்.

"மாட்சிமை மிக்க அக்னிமா அவர்களே, மிக வயதானவரிடம் பேச விரும்பினால், தாங்கள் இந்த ஒட்டகத்துடன் பேசலாம். எங்கள் நகரத்தில் இதைவிட அதிக வயதுடையவர் வேறு யாரும் இல்லை. நீண்ட தாடியுடையவர் யாரும் நகரில் இல்லை!" என்றான் அச்சிறுவன்.

சிறுவனின் சமயோஜித அறிவைக் கண்டு மலைத்துப் போன அக்னிமாவின் கோபம் மறைந்தது.

"நீ தைரியமான, புத்திசாலிப் பையனாக இருக்கிறாய். இதற்காக உனக்கு ஒரு பரிசளிக்க விரும்புகிறேன். நீ விரும்பியதைக் கேள்!" என்றான் அக்னிமா.

"என்னுடைய கிழட்டு ஒட்டகம் செத்துக் கொண்டிருக்கிறது. இதன் தோலைப் புதைக்க எவ்வளவு இடம் தேவையோ அதை மட்டும் எனக்குக் கொடுங்கள் போதும்," எனக் கேட்டான் சிறுவன்.

சிறுவனின் வேண்டுகோளைக் கேட்டு, ஏளனமாகச் சிரித்தான் அக்னிமா. ஒட்டகத்தின் தோலைப் புதைக்க எவ்வளவு நிலம் தேவையோ, அதைத் தருவதாக வாக்களித்தான். கிழட்டு ஒட்டகம் விரைவில் கீழே விழுந்து இறந்தது. அதன் தோலைநாராகக் கிழித்தான் சிறுவன். அவற்றை ஒன்றாகச் சேர்த்து முடிச்சுப் போட்டு நீண்ட கயிறு போலாக்கினான். பிறகு அதை முற்றுகையிட்ட நகரத்தைச் சுற்றிலும் கீழே புதைத்தான்.

இதைக் கண்டதும், சிறுவன் தன்னைத் தந்திரமாக ஏமாற்றிவிட்டான் என்பதை அக்னிமா உணர்ந்து கொண்டான். ஆனால், இனி என்ன செய்ய முடியும்? தான் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை! நகரத்தை முற்றுகையிடுவதைத் தவிர்த்தான். தனது படைகளையும் விலக்கிக் கொண்டான். பிறகு அந்தப் பக்கமே அவன் தலைகாட்டவில்லை. புத்திசாலி குடிமக்கள் இருந்தால் ஒரு மன்னருக்கு எத்தனை நன்மைகள் பாருங்கள்!

## 09.2015 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 44 - எகிப்தின் பாரோ ஏழாம் கிளியோபாத்ரா தனது மகன் சிசேரியனை அரசனாக்கினாள்.
- கி.மு 31 - கிரேக்கத்தின் மேற்குக் கரையில் ஒக்டேவியனின் படைகள் மார்க் அந்தோனி, மற்றும் கிளியோபாத்ராவின் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1666 - இலண்டன் பெரும் தீ: லண்டனில் இடம் பெற்ற பெருந்தீயினால் மூன்று நாட்களில் புனித போல் தேவாலயம் உட்பட 10,000 கட்டடங்கள் அழிந்தன.
- 1752 - கிரெகொரியின் நாட்காட்டி மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு நூற்றாண்டுகளின் பின்னர் ஐக்கிய இராச்சியத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1792 - பிரெஞ்சுப் புரட்சியின் போது இடம்பெற்ற கலவரங்களில் மூன்று ரோமன் கத்தோலிக்க ஆயர்கள் உட்பட இருநூற்றிற்கும் அதிகமான குருமார்கள் கொல்லப்பட்டனர்.
- 1870 - பிரான்சில் செடான் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் பிரஷ்யப் படையினர் பிரான்சின் மன்னனான மூன்றாம் நெப்போலியனையும் அவனது படையினர் 100,000 பேரையும் கைது செய்தனர்.
- 1885 - வயோமிங் மாநிலத்தில் 150 வெள்ளையின சுரங்கத் தொழிலாளர்கள் வெளிநாட்டு சீனத் தொழிலாளர்களைத் தாக்கி அவர்களில் 28 பேரைக் கொன்று 15 பேரைக் காயப்படுத்தினர். பல நூற்றுக் கணக்கானோர் நகரை விட்டுத் தப்பியோடினர்.
- 1898 - பிரித்தானிய மற்றும் எகிப்தியப் படைகள் சூடானிய பழங்குடியினரைத் தாக்கி அந்நாட்டில் பிரித்தானிய மேலாண்மையை ஏற்படுத்தினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பசிபிக் போர் முடிவுக்கு வந்தது. ஜப்பானின் கடைசி அதிகாரபூர்வமான சரணடைதல் டோக்கியோ வளைகுடாவில் "மிசூரி" என்ற அமெரிக்கக் கப்பலில் நிகழ்ந்தது.
- 1946 - பிரித்தானிய இந்தியாவில் ஜவகர்லால் நேரு தலைமையில் பிரதமரின் அதிகாரங்களுடன் இடைக்கால அரசு உருவானது.
- 1951 - எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கை சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.
- 1996 - பிலிப்பீன்ஸ் அரசுக்கும் மோரோ தேசிய விடுதலை முன்னணிக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 2006 - ஈழப்போர்: யாழ்ப்பாணம் பருத்தித்துறை முனை கடற்சமரில் இலங்கைக் கடற்படையின் 2 டோரா படகுகள் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.

### பிறப்புக்கள்

- 1838 - லில்லியுகலானி, அவாய் ஆட்சியாளர் (இ. 1917)
- 1866 - சாள்ஸ் வின்சன்ட், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்டாளர் (இ. 1943)
- 1913 - இஸ்ரேல் கெல்ஃபாண்ட், ரஷிய கணிதவியலர் (இ. 2009)
- 1952 - ஜிம்மி கான்னர்ஸ், அமெரிக்க டென்னிசு ஆட்டக்காரர்
- 1966 - சல்மா ஹாயெக், மெக்சிக்க-அமெரிக்க நடிகை
- 1969 - ஸ்டீபன் பியல், சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர்
- 1973 - இந்திக டி சேரம், இலங்கைத் துடுப்பாட்ட வீரர்
- 1988 - இஷாந்த் ஷர்மா, இந்துயத் துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

- 1973 - ஜே. ஆர். ஆர். டோல்கீன், பிரித்தானிய எழுத்தாளர் (பி. 1892)
- 1996 - பேடி கிளிஃப்ட், சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர் (பி. 1953)
- 2009 - ராஜசேகர ரெட்டி, ஆந்திர முதலமைச்சர் (பி. 1949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்தும் மோ.சைக்கிளும் விபத்து

## இளைஞன் பலி

(மல்லாவி)

தனியார் பயணிகள் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றையவர் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.20 மணியளவில் கிளி/ அக்கராயன் வித்தியாலயத்திற்கு அருகாமையில் இடம்பெற்றது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் வட்டக்கச்சி கல்மடுவைச் சேர்ந்தவர்களான தியாகராஜா பிரசாந்தன் (வயது 20), சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

மற்றையவர் சண்முகலிங்கம் அஜந்தன் (வயது 23) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கிளிநொச்சி பேருந்து தரிப்பிடத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு முழங்காவில் நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்று பிற்பகல் 2.20 மணியளவில் கிளி/ அக்கராயன் வித்தியாலயத்திற்கு அண்மையாக பயணித்த வேளை ஜெயபுரத்தில் இருந்து கல்மடுவிற்கு பயணித்த மோட்டார் சைக்கிள் எதிராக வந்த வேளை ஒன்றுடன் ஒன்று மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய ாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தியாகராஜா பிரசாந்தன் (வயது 20) என்ற இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமாரினால் மேற்கொள்ளப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. விபத்து தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-15)




## ஆசிரியர்களுக்கான சைவநெறி பாட போட்டிப் பரீட்சை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இயங்கி வருகின்ற இந்து அறநெறிப் பாடசாலைப் பேரவையானது அறநெறிப்பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் சமய அறவினையும் வாண்மை விருத்தியினையும் மேம்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சைவநெறிப் பாட போட்டிப்பரீட்சை ஒன்றினை நடத்தவுள்ளது.

இதற்கு வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள அறநெறி ஆசிரியர்கள் 552 பேர் பிரதேச செயலகங்களூடாக விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே சகல ஆசிரியர்களும் இப்பரீட்சைக்கு தோற்றி பயன் பெறுமாறு பேரவைச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 077 0691582 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறமுடியும் என அவர் அறிவித்துள்ளார். (2)

# தொழிற்பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களும் உபகரணங்களும் வழங்கி வைப்பு



(மல்லாவி)

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் சமூக சேவைகள் அமைச்சினால் நாடளாவிய ரீதியிலுள்ள மாவட்ட செயலகங்கள் ஊடாக திரிசவிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மாற்று திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக கிளிநொச்சி மாவட்ட செயலகமூடாக மாற்றுத் திறனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதன் நிறைவுவிழா நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி பயிற்சி கல்லூரியில் 6 மாத பயிற்சியினைப் பூர்த்தி செய்த மாற்று திறனாளிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ் வும் தொழில்சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கிளி/ ரெக் தலைவரும் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளருமான ச.மோகனபவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

பயிலுநர்கள் ஆக்கப்பட்ட பொருட்களைக்கொண்ட கண்காட்சி கூடம் அரசாங்க அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த கற்கை நெறியில் 40 பேர் வரை பங்கேற்றனர். கற்கை நெறிக் காலத்தில் தலா 110 ரூபா வீதம் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கற்கை நெறியினை பூர்த்தி செய்த 20 பேருக்கு தையல் இயந்திரங்களும் மேலும் 20 பேருக்கு 10 ஆயிரம் ரூபாய் பெறுமதி யான கையடக்கத் தொலைபேசி திருத்தும் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (2-15)

# நீதிமன்ற உத்தரவிற்கமைவாக புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது

(மல்லாவி)

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவிற்கமைய கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதிவாளர் தலைமையில் கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சியில் 650 இற்கும் மேற்பட்ட முச்சக்கரவண்டிகள் பயணிகள் சேவையில் ஈடுபடுகின்றன.

இவற்றின் சங்க ரீதியாக 450 முச்சக்கரவண்டிகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நடப்பாண்டில் இதுவரை யும் மூன்று சங்க நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்டு இயங்கி வந்த நிலையில் முச்சக்கர வண்டி உரிமையாளரிடம் இருந்து திரட்டப்பட்ட 39 இலட்சம் நிதி முறையற்ற விதத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது எனவும் சேவையில் ஈடுபடுவதை முச்சக்கரவண்டிகள் பணி தொடர்பில் முரண்பாடுகள் ஏற்பட்டுகிளிநொச்சிபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே கிளிநொச்சி நீதிமன்றில் முச்சக்கரவண்டி உரிமையாளர்களினால் தற்போதுள்ள முச்சக்கரவண்டி நிர்வாகத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணை யாழ். மேல் நீதிமன்றிற்கு மாற்றப்பட்டதையடுத்து வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.


இதனை அடுத்தே யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதிவாளர் தலைமையில் புதிய முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற வேண்டுமென உத்தரவிட்டார்.

அத்துடன் கடந்த கால கணக்கு விபரங்கள் சான்று பெற்ற கணக்காய்வு நிறுவனத்தினால் ஆய்விற்குட்படுத்தப்பட்டு புதிய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

இதற்கு அமைய கடந்த 29 ஆம் திகதி புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றது. (2-15)

# சோடா போத்தல் பெட்டிகளுடன் பாரவூர்தி தடம் புரண்டது

## சாரதி வைத்தியசாலையில் அனுமதி



(திருவையாறு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சோடா பெட்டிகளுடன் பயணித்த பாரவூர்தியொன்று வேகக்கட்டுப்பாட்டையிழந்த நிலையில், வீதியை விட்டுவிலகி தடம் புரண்டது.

இச்சம்பவம்நேற்று அதிகாலை 5 மணியளவில் ஏ-9 வீதியிலுள்ள கொக்குவில் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது.


இவ்விபத்தின்போது சாரதி படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு யானை மார்க் சின்னம் பொறிக்கப்பட்ட சோடா நிரப்பப்பட்ட போத்தல் பெட்டிகளை ஏற்றி பயணித்தவேளை வாகனம் திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது.

இதன்போது பெட்டிகளில் அடுக்கப்பட்டிருந்த சோடாப் போத்தல்கள் சிந்திச் சிதறின.

சம்பவம் அறிந்த முல்லைத்தீவு பொலிசார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (2-273)



பூநகரி பிரதேச அருள்மிகு மடத்துப்பிட்டி தான்தோன்றி பிள்ளையார் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் நடைபெற்றதைப் படத்தில் [illegible] லாம். (படம்:- முக்கொம்பன் செய்தி[illegible])

# முன்னாள் போராளி குடும்பத்திற்கு புலம்பெயர் வாழ் தமிழர் நிதியுதவி

(மல்லாவி)

வன்னியில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தின் போது தலைப்பகுதியில் ஏற்பட்ட ஷெல் சிதறல்களுக்குள்ளாகி, சத்திர கிச்சை மேற்கொள்ள பண வசதியின்றி உச்சக்கட்ட வேதனையின் தாக்கத்தினால் அவதியுற்ற புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் தற்கொலை செய்துகொண் டார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு இரணைப்பாலை கிராமத்தில் வசித்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியான ஆரோக்கிய நாதன் பிரான்சிஸ் (வயது 35) என்ற [illegible] தற்கொலை செய்து கொண்டவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இவர் வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்தின்போது படுகாயம் அடைந்த நிலையில் இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்டதன் பின்னர் குடும்பத்துடன் இணைக்கப்பட்டார்.

இந்நிலையில் இவரது உடலில் காணப்பட்ட காயங்களில் தலைப் பகுதியில் ஏற்பட்டிருந்த கட்டிகளுக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டி இருந்தது.

அத்துடன் பணவசதியின்றியும் நோய் உச்சக்கட்ட தாக்கதினாலும் பாதிக்கப்பட்டிருந்த இவரை குடும்ப வறுமையும் ஆட்கொண்டிருந்த. நிலையில் கடந்த மாதம் தற்கொலை செய்து கொண்டார்.


இவரது பரிதாப முடிபை ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்ட லண்டன் வாழ் புலம்பெயர் உறவு ஒருவரினால் இயக்கப்படும் தமிழர் கராத்தே கல்லூரியைச் சேர்ந்த கறுப்புப்பட்டி பெற்ற மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் ஆசிரியூர்களும் இணைந்து இரண்டு இலட்சம் ரூபா நிதியைத் திரட்டி இவரது குடும்பத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இப்பணத்தைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் நேரில் சென்று மனைவியிடம் கையளித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இதுவரையில் நடத்தப்பட்ட விசாரணைகளில் கே.பி. குற்றவாளியென ஊர்ஜிதமாகவில்லை

**(கொழும்பு) கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனிடம் இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளுக்கமைய அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்படவில்லையென சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.**




கே.பியை கைதுசெய்து அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தாக்கல் செய்திருந்த ரிட் மனு மீதான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன் போதே சட்டமா அதிபர் சார்பில் மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டது.

புலிகள் அமைப்பில் முக்கிய தலைவராகவிருந்த கே.பிக்கு எதிராக 193 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளுக்கு அமைய குமரன் பத்மநாதன் குற்றவாளியாக அடையாளம் காணப்படவில்லை. இவரிடம் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு ஒக்டோபர் 28 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்குமாறு சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த உதவி சொலி சிட்டர் ஜெனரல் பிரியந்த நாவான நீதிமன்றத்தில் அறிவித்தார்.

இதற்கு அனுமதி வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி விஜித் மலல்கொட, அன்றைய தினம் விசாரணை அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். இந்த வழக்கில் பொலிஸ்மா அதிபர் உட்பட பலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

புலிகளின் சர்வதேசத் தலைவராகவிருந்த கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவரை கைதுசெய்து, சட்டத்தன் கீழ் நடவடிக்கை எடுக்க வேணடும் என ஜே.வி.பி. தனது மனுவில் குறிப்பிட்டிருந்தது. மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான சுனில் வட்டகல மற்றும் உபுல் குமார ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

கே.பி. தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கையை சமர்ப்பித்திருக்காத சட்டமா அதிபர் திணைக்களம், இதுவரை நடத்திய விசாரணைகளுக்கு அமைய கே.பி குற்றவாளியாக அடையாளம் காணப்படவில்லையெனக் கூறியுள்ளனர்.


விரிவான அறிக்கையை தாம் எதிர்பார்த்திருப்பதாக சுனில் வட்டகல கூறினார்.

நீதிமன்றத்தில் தீர்வொன்று கிடைக்காவிட்டால் இதுவிடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவற்கு எதிர்பார்த்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெந்தயம்

Botanical Name: Trigonella foeaum- graecum
Family: Leguminosae
Engl: Fenugreek
Sinh: Uluhal



ஓராண்டுச் செடி. 30 தொடக்கம் 60 செ.மீ. உயரமுடையது. நேரான மெல்லிய கிளைகளைக் கொண்ட உருளை வடிவ அழுத்தமான மென்மையான உரோமங்களைக் கொண்டது. இலைகள் ஒன்றுவிட்ட இலையமைப்பு கொண்டது. கோளவடிவ இலைகள். இருபாலான ஒழுங்கான மஞ்சள் நிறமான பூக்களைக் கொண்டது. பழங்கள் 12.5-17.5 செ.மீ நீளமானது. 10-12 விதைகள். 6 மி.மீ நீளமானது. மெல்லிய செம்மஞ்சள் நிறமானவை.

கரிசல் மற்றும் வண்டல் நிலங்களில் இது நன்கு வளரும்.

### மருத்துவப் பயன்கள்

10 கிராம் அளவு வெந்தயத்தை இரவு உணவுக்குப் பின்பு விழுங்கி தண்ணீர் குடித்துவந்தால் மலச்சிக்கல் நீங்கும்.

வெந்தயம், கசகசா இரண்டையும் சமஅளவு எடுத்து அரைத்து தயிரில் கலந்து சாப்பிட்டால் சீதபேதி, பேதி கட்டுப்படும்.

வெந்தயத்துடன் அதேயளவு நெல்வற்றல் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் வாந்தி, ருசியின்மை நீங்கும்.

வெந்தயத்தைஅதேயளவு கொத்துமல்லி சேர்த்து அரைத்து 5 கிராம் அளவு சாப்பிட்டால் சிறுநீரக நோய்கள் குணமாகும்.

வெந்தயத்தை இரவு முழுவதும் ஊறவைத்து வேப்பம் இலைகளை சேர்த்து அரைத்து தலை முழுகிவரபேன், பொடுகுத்தொல்லை நீங்கும்.

வெந்தயத்தை வேகவைத்து கடைந்து தேன்சேர்த்து சாப்பிட்டால் மலச்சிக்கல் நீங்கும். மூலநோய்கள் குணமாகும்.

வெந்தயம், சுண்டை வற்றல், மிளகு ஒரேயளவாக எடுத்து பொடி செய்து 5 கிராம் அளவு தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர உடல் எடை குறையும்.

வெந்தயம், சுக்கு, ஓமம், நாவல் விதை, நெல்லிவற்றல், மஞ்சள் ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து உலர்த்தி தனித்தனி பொடித்து பின்பு எல்லாவற்றையும் ஒன்று கலந்து பொடித்து அரித்து 5 கிராம் அளவு காலை, மாலை சாப்பிட்டுவர நீரிழிவு நோய் கட்டுப்படும்.

உழுத்தம்பருப்பு அரை டம்ளர் (100 கிராம்), வெந்தயம் 20 கிராம் ஆகிய இரண்டையும் ஊறவைத்து கல்லுரலில் இட்டு விழுதாக இடித்து, அரைத்து நல்லெண்ணெய் 50 மில்லி சிறிது மஞ்சள் தூளும் கலந்து வாணலியில் இட்டுக்காய்ச்சி களிப்பக்குவத்தில் பொறுக்கும் சூட்டோடு சாப்பிட குடற்புண் நீங்கும்.

செத்தல் தேங்காயில் கண்ணைக் குடைந்து தண்ணீரை வடித்து விடவும். கண்துளை வழியாக 3/4 பங்கு வரை தேங்காய் எண்ணெய் ஊற்றவும். அத்துடன் ஒருகைப்பிடி அளவு சுத்தம் செய்த வெந்தயத்தை சேர்க்கவும். கண்துளையை சுத்தமான பஞ்சினால் மூடி 3 நாட்கள் வைத்திருந்த பின்பு தேங்காயில் ஊறிய எண்ணெய்யை வெந்தயத்துடன் எடுத்து கண்ணாடிப் புட்டியில் வைத்துக்கொள்ளவும். இதனைத் தினந்தோறும். தலைக்குத் தடவிவர வெப்பம் தணியும். தலைமயிர் நன்கு வளரும்.

வெந்தய விதைகளை வறுத்துப் பொடித்து ஊறல் குடிநீர் செய்து 60 மில்லி அருந்திவர உடல் வெப்பம் தணியும்.

ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை வாயில்போட்டு ஒரு டம்ளர் தயிரோ, மோரோ குடிக்கவயிற்றுச்சூடு, வயிற்றுவலி நீங்கும்.

### 100 கிராம் வெந்தயத்திலுள்ள சத்துக்கள்

புரதம்-26.2 கிராம்
கொழுப்பு-5.8 கிராம்
நார்ப்பொருள்-7.2 கிராம்
காபோவைதரேற்று-44.1 கிராம்
கல்சியம்-160 மில்லி கிராம்
இரும்பு-14.1 மில்லி கிராம்
பொட்டாசியம்-530 மில்லி கிராம்
உயிர்ச்சத்து ஏ-96 மைக்ரோ கிராம்.

### வெந்தயப் பொடி கோப்பி

வறுத்த வெந்தயம்-50 கிராம்
வறுத்த சீரகம்-25 கிராம்
வேர்க்கொம்பு- 20 கிராம்
மல்லி-25 கிராம்
ஏலக்காய் -10
புளியங்கொட்டைப் பருப்பு-50 கிராம்

புளியங்கொட்டை, வறுத்த வெந்தயம், சீரகம், வறுத்த சுக்கு இவைகள் அனைத்தையும் நன்றாகப் பொடிசெய்து, மல்லி, ஏலக்காயைக் காயவைத்து ஒன்றாகப் பொடி செய்து எல்லாவற்றையும் சேர்த்து ஒரு போத்தலில் பத்திரப்படுத்தவும். 2 தேக்கரண்டி தூளாக்கி 200 மில்லி சுடுநீர் கலந்து கோப்பியாக தயாரித்துப் பருகிவர வாய்ப்புண், வயிற்று நோ, வயிற்று எரிச்சல், புளியேப்பம், மூலநோய், உடல் உஷ்ணம் இவைகள் யாவும் குணமாகும். உணவையும் நன்கு சீரணமடையச் செய்யும்.

### வெந்தயம் பொடிக்கஞ்சி

ஊறவைத்து முளைகட்டிய வெந்தயம் 500 கிராம்
கருப்பட்டி-500 கிராம்
ஏலக்காய்-9
சீனி-100 கிராம்
உப்பு- தேவையான அளவு
பசுப்பால்-250 மில்லி

முளைவிட்ட வெந்தயத்தை உலர்த்தி பொடித்து, கருப்பட்டியை தூளாக்கி சேர்த்து ஏலக்காயையும் பொடித்து சேர்த்து இப்பொடியை தேவையானளவு தண்ணீரில் கலந்து கொதிக்கவைத்து சீனி, தேவையானளவு உப்புச் சேர்த்து பசும்பால் சேர்த்து கொதி வந்ததும் இறக்கி ஆறவிட்டு சாப்பிடலாம்.

நரம்பு சம்பந்தமான வியாதியுடையவர்கள் இவ்வாறு தயாரித்து சாப்பிட்டுவர குணமாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைக்கு அமெ.ஆதரவளிக்க வேண்டும்

## வைகோ மகஜர் கையளிப்பு

**இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைக்கு அமெரிக்கா ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தி ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ அமெரிக்க தூதரகத்தில் கோரிக்கை மனுவை கையளித்துள்ளார்.**

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் தொடர்பான விசாரணையை இலங்கை அரசே நடத்தும் வகையிலான தீர்மானத்தை ஐ.நா. மனிதவுரிமை ஆணைக் குழுவில் தாக்கல் செய்ய அமெரிக்கா முடிவு செய்து ள்ளது.

இதனைக் கண்டித்து. மதிமுக சார்பில், சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகம் எதிரே செப்டெம்பர் முதலாம் திகதி தனது தலைமையில் ஆர்ப்பாட்டம நடைபெறும்என ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ முன்னர் அறிவித்திருந்தார்.

அதன்படி, நேற்று தனது ஆதரவாளர்களுடன் அமெரிக்க தூதரகத்திற்குச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைகோ, தூதரகத்தில் கோரிக்கை மகஜரை அளித்தார். அந்த மனுவில், இலங் கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைக்கு அமெரிக்கா ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர் நிருபர்களைச் சந்தித்த வைகோ, அமெரிக்க தூதர் தன்னை சந்திக்காததால் அங்கிருந்த அமெரிக்க அரசியல் ஆலோசகரிடம் மனுவை ஒப்படைத்ததாக தெரிவித்தார். மேலும், தூதர் தன்னை சந்திக்க மறுத்தது அமெரிக்காவின் எதேச்சதிகாரத்தைக் காட்டுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (3-7)

## இந்திய மீனவர்கள் 16 பேரையும் விளக்கமறியலில் வைக்க பணிப்பு

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு கடற்படையிரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 16 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கட்டைக்காட்டு கடற்பரப்பில் ஒரு படகில் வந்து மீன்பிடியில் ஈடுபட்ட நாகபட்டினத்தை சேர்ந்த 9 மீனவர்களும், நெடுந்தீவு வடக்கு காரைநகர் கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து மீன்பிடியில் ஈடுபட்ட கோட்டைப்பட்டினத்தை சேர்ந்த 3 மீனவர்களும், இராமநாதபுரத்தை சேர்ந்த 4 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை அதி காரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர். கட்டைக்காட்டு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட நாகபட்டினத்தை சேர்ந்த 9 மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றிலும் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 7 மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன் றிலும் நேற்றைய தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பருத்தித்துறை நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட 9 மீனவர்களும் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 7 மீனவர் களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அந்தந்த நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன. (இ-9)

## பாடசாலை மாணவிக்கு பாலியல் தொந்தரவு

பாடசாலை மாணவி ஒருவர் வானுக்குள் வைத்து பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக குறித்த மாணவியின் பெற்றோர்களால் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

பொகவந்தலாவையில் அமைந்துள்ள பாடசாலையில் கல்வி கற்கும் 11 வயதுடைய மாணவியே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவையிலிருந்து குயினா தோட்டம் வரை பயணிகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் 54 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் குறித்த சந்தேகநபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். அத்தோடு குறித்த மாணவி வைத்திய பரிசோதனைக்காக பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 160 | 120 |
| தக்காளி | 80 | 120 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 |
| கோவா | 80 | 60 | 80 | 80 |
| கரட் | 120 | 100 | 160 | 80 |
| பூசணி | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 50 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 90 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | .20 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 120 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 40 | 100 | 40 | 50 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 150 | 200 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 60 | 80 |
| கீரை – 1 பிடி | 30 | .15 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-70 | 35-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 200 | – | 250 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 200 | 100 |
| முள்ளங்கி | 40 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 320 | 40 | .30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 476

Search for people, places and things Nagendram Home

சரவணன் சுந்தா



படிப்பு அறிவு தரும்
அறிவு பணம் தரும்
பணம் திமிரை தரும்
திமிரு ஆணவம் தரும்
ஆணவம் அழிவை தரும்
அதனால்

படிப்பை எதிர்ப்போம்
ரெஸ்ட் எடுப்போம்

சத்தியலிங்கம் லதீனன்



"எனக்கும் என் மனைவிக்கும் கருத்து வேறுபாடு வருது மேடம்..."

"எப்படி...?"

"நான் "சுடு தண்ணி"ன்னு சொல்றேன்; அவ அதை "காபி"ன்னு சொல்றா..!"

ஜெராட் நிரோஜன்

தயவுசெய்து இதை அனைவருக்கும் பகிருங்கள்...

தற்போது சீனாவில் நடந்த துயரச் சம்பவம் வெளிநாட்டுக்கு சுற்றுலா சென்ற சீன தேசத்தை சேர்ந்த ஒருவர் அங்கு கடையில் விற்பனை செய்த பலாப்பழத்தை வாங்கி சாப்பிட்டு விட்டு கூடவே coco-cola வையும் அருந்தி இருக்கிறார்..இதனால் சிறிது நேரம் கழித்து நெஞ்சடைத்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.. மருத்துவ மனைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்த போது தான் உண்மை தெரிய வந்துள்ளது.. அது என்னவென்றால் பலாப்பழத்தை சாப்பிட்டு விட்டு உடனே COCO-COLA அருந்தியதால் அது விஷமாக மாறி இருக்கிறது.. அப்படி சாப்பிடுவது 5 அடி நாகப்பாம்பின் விஷத்துக்கு சமம்..அதனால் தயவு செய்து பலாப்பழம் சாப்பிட்டு எட்டு மணி நேரத்திற்கு COCO-COLA; PEPSI போன்ற பானங்களை அருந்தாதீர்கள்...

நல்ல தகவல்களை அனைவருக்கும் தெரியப்படுத்துவோம்



குரு ஜி சிம்பு




லயன் பொனி அண்டுறு



Love சொல்லி
பதில் வரலைன்னா கூட தாங்கிக்கலாம்..
exam ல கூப்பிட ...... கூப்பிட .......
நண்பன் திரும்பாம
இருக்கிற வலிய தாங்கவே முடியாது...

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர அமைதியை பெற்றுத்தருமா ஒப்பந்தம்?

தெற்கு சூடானில் அரசுக்கும், அரசு எதிர்ப்புக் குழுவுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் ஒருவழியாகக் கையெழுத்தாகியுள்ளது.

இதன்மூலம் அங்கு உடனடியாக நிரந்தர அமைதி திரும்பும் என்று சொல்வதற்கில்லை என்றாலும், கடந்த 20 மாதங்களாக நடந்து வந்த கொடூரமான உள்நாட்டுச் சண்டைக்குத் தாற்காலிகமாக ஒரு முடிவு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

சூடானில் இருந்து 2011 இல் பிரிந்த தெற்கு சூடானில் அன்று முதல் சல்வா கிர் ஜனாதிபதியாக இருந்து வருகிறார். துணை ஜனாதிபதியாக இருந்த ரியெக் மச்சார், அரசுக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபடத் திட்டமிடுகிறார் எனக் குற்றஞ்சாட்டி 2013 டிசம்பரில் அவரைப் பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கியதில் ஆரம்பித்தது பிரச்சினை.

அன்று முதல் அரசுப் படைக்கும், ரியெக் மச்சார் தலைமையிலான எதிர்ப்புப் படைக்கும் சண்டை மூண்டு அமைதியை இழந்தது நாடு.

1.10 கோடி மக்கள் தொகை கொண்ட தெற்கு சூடானில், இந்தச் சண்டை காரணமாக கடந்த 20 மாதங்களில் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். 10 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே வீடு, உடைமைகளை இழக்க நேரிட்டது. 4 இலடசம் பேர் அண்டை நாடுகளான கென்யா, சூடான், உகாண்டாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

பாலியல் பலாத்காரம், சிறுவர்களைப் படையில் சேர்ப்பது, பட்டினிச் சாவு என நாட்டின் நிலைமை மோசமான நிலைக்குச் சென்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் தற்போது இந்த அமைதி ஒப்பந்தம் கையெ முத்தாகியுள்ளது. எத்தியோப்பியா, உகாண்டா, கென்யா உள்ளிட்ட எட்டு நாடுகள் அடங்கிய பிராந்திய அமைப்பு, ஐ.நா. சபை, ஆப்பிரிக்க யூனியன், அமெரிக்கா, சீனா, பிரிட்டன், நோர்வே ஆகிய நாடுகளின் முயற்சியால் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



கடந்த ஆகஸ்ட் 17 ஆம் திகதியே இந்த அமைதி ஒப்பந்தத்தில் அரசு எதிர்ப்புப் படைத் தலைவர் ரியெக் மச்சார் கையெழுத்திட்டாலும், ஜனாதிபதி சல்வா கிர் காலம் தாழ்த்தி வந்தார்.

ஆனால், ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால், பொருளாதாரத் தடைகளைச் சந்திக்க நேரிடும் என ஐ.நா. எச்சரித்ததைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 26 ஆம் திகதி அவரும் கையெழுத்திட்டார்.

ஆனால், அந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் எவரும் வெளிப்படுத்தும் முன்னரே, நிகழ்ச்சி நடைபெற்ற மேடையிலேயே, ஒப்பந்தத்தில் உள்ள பல விடயங்களை ஏற்க முடியாது என்ற தனது அதிருப்தியை வெளிப்படுத்தி கடிதம் ஒன்றையும் கூட்டணி நாடுகளின் தலைவர்களிடம் கொடுத்தார் ஜனாதிபதி.

புதிய ஒப்பந்தத்தின்படி, முன்பு துணை ஜனாதிபதியாக இருந்த ரியெக் மச்சார் மீண்டும் துணை ஜனாதிபதியாகப் பதவியேற்பார். (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 268**

## அஹங்காரத்தை விடுதல்

...ஒரு குருவை உங்களால் ஒருபோதும் ஏமாற்ற முடியாது. வேண்டுமானால் அவரை ஏமாற்றிவிட்டதாக ஒரு எண்ணத்தை வைத்துக் கொண்டு உங்களையே ஏமாற்றிக் கொள்ளலாம்.

நீங்கள் உங்கள் அஹங்காரத்தையும் தந்திரத்தையும் எவ்வளவுதான் ஆழமாக மறைந்து நன்றாக மூடி வைத்துக்கொண்டாலும் குருவின் கூர்மையான பார்வையில் அவை வெறுமனே வெளிப்பட்டு விடும்.

நீங்கள் அதை மறைக்கப் போராடிக் கொண்டிருக்கும் பொழுது குரு அதை குணப்படுத்த முயற்சி செய்கிறார்.

அஹங்காரம் எத்தகைய அழிவை ஏற்படுத்தும் கொடிய வியாதியென்பதை அவர் மட்டுமே அறிவார்.

நான் பகவத் கீதையில் இருந்து சில விடயங்களைச் சொல்கிறேன்.

கிருஷ்ணருடைய, உலகிற்கான உபதேசமே பகவத் கீதை.

பகவத் கீதையின் தொடக்கத்தில் அர்ஜுனன் குழப்பத்தில் இருக்கிறான்.

அவன் சொல்கிறான், ஓ பிரபுவே! எனக்கு வாழ்க்கையில் என்ன செய்வதென்று தெரியவில்லை.

தயைகூர்ந்து என்னை வழிநடத்திச் செல்லுங்கள்.

கிருஷ்ணர் அவனுக்கு ஆத்மனை அடையும் வழியான சாங்கிய யோகத்தை விளக்குகிறார்.

பிறகு கர்ம யோகத்தையும் பக்தி யோகத்தையும் கர்ம ஸந்யாஸ யோகத்தையும் இவ்வாறு பல



யோகங்களையும் விளக்குகிறார்.

அவர் 18 அத்தியாயங்களில், 700 சுலோகங்களில் பல்வேறு தியான முறைகளையும் விவரிக்கிறார்.

இறுதியில் அர்ஜுனன் சொல் கிறான்.

கிருஷ்ணா, நீங்கள் விளக்க ஆரம்பித்த பொழுது இருந்ததை விட இப்பொழுது மிகுந்த குழப்பத்தில் இருக்கிறேன்.

நான் எந்த முறையைப் பின்பற்றுவது? எந்தமுறை மிகவும் சிறந்ததும் [illegible] எது உருக்கு வழி- இறுதியான முறை?

கிருஷ்ணார் இதற்கு இறுதியான 18 ஆம் அத்தியாயத் தில் பதிலளிக்கிறார்.

எந்தக் குருடனும் அவர் முடிவாகச் சொல்லும் வார்தைகளே, கடைசியானதும், உறுதியானதும், இறுதியான உண்மையாகும்.

கிருஷ்ணர் சொல்கிறார், சர்வ தர்மன் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வ சர்வபாபேப்யோ மோக்ஷாயிஷ்யாமிமா சுசஹ.

அவர் சொல்லும் இந்த வரிகள் எது போன்றவை என்றால், எல்லா மதங்களையும் தத்துவங்களையும் ஆன்மீக நூல்களையும் ஒரு பானைப் பாலாக நாம் கற்பனை செய்து கொண்டால் இது அவை எல்லாவற்றிலும் இருந்து கடைந்து எடுக்கப்பட்ட அவற்றின் சாரமான வெண்ணெயாகும்.

அவர் சொல்கிறார், நான் உனக்கு எல்லாவிதமான நீதிகளையும் விளக்கிவிட்டேன். எல்லாவற்றையும் வெறுமனே என்னிடம் சரணாகதி செய்து விடு. என்னிடம் சரணடைந்துவிட்டால் நானே உன்னை கவனித்துக் கொள்கிறேன்.

நான் உன்னை எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுவித்து உனக்கு முக்தியளிக்கிறேன்.

கிருஷ்ணர் சுலோகத்தின் இந்தப் பத்தியில் உண்மையிலேயே அற்புதமான ஒரு உறுதி மொழியை அளிக்கிறார்


(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசப்பற்றாளர்கள் அரசுடன் இணைவு

### கரு ஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு) —

**மெய்யான தேசப்பற்றாளர்கள் தேசிய அரசாங்கத்துடன் இருக்கின்றார்கள் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

நாட்டில் எதிர்வரும் ஐந்து ஆண்டுகள் பொன்னான காலமாக அமையும். இந்த நாட்டு மக்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்த புரட்சியொன்றை செய்தார்கள்.

ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி அதனை மீளவும் உறுதி செய்திருந்தனர்.

மெய்யாகவே தேசத்தின் மீது பற்றுக் கொண்டவரும் நல்லாட்சி தேசிய அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட முடியாது. அவ்வாறு செய்பவர்கள் மக்களினால் அவர்கள் நிராகரிக்கப்படுவார்கள். கட்சி தாவுதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என நாம் உறுதியளித்தோம்.

அதன் அடிப்படையிலேயே நாம் தனிக்கட்சி அரசாங்கமொன்றை அமைக்காது, தேசிய அரசாங்கத்தை உருவாக்குகின்றோம்.

இந்த நடவடிக்கை நாட்டு மக்களினால் வரவேற்கப்பட்டுள்ளது என கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் அளித்த நேர்காணலில் அவர இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.தே.க. சிரேஷ்ட எம்.பிக்களுடன் பிரதமர் ரணில் கலந்தாலோசனை

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தேசிய அரசாங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் அமைச்சர் நியமனங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் முக்கிய அமைச்சுப் பதவிகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைக்கவுள்ள தேசிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை எதிர்வரும் நான்காம் திகதி வெள்ளிக்கிழமை பதவியேற்கவுள்ளது.

அந்தவகையில் அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களின் தெரிவு அமைச்சுக்களுக்காக இலாகா தெரிவுகள் உள்ளிட்ட பல செயற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக 45 அமைச்சரவை அமைச்சுக்கள் உருவாக்கப்படவுள்ள நிலையில் அதில் 30 அமைச்சுப் பதவிகள் ஐக்கிய தேசிய கட்சிக்கும் 15 அமைச்சுப் பதவிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே இரண்டு கட்சிகளுக்குமான அமைச்சுப் பதவி பகிர்வுகளும் மேற்கொள்ளப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயம், உயர்கல்வி, சமுர்த்தி உள்ளிட்ட முக்கிய சில அமைச்சுப் பதவிகள் சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தேசிய அரசாங்கததில் அமைச்சுப் பதவிகளை பகிர்ந்துகொள்வது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீல ங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் முழுமையான இணக்கப்பாடு எட்டப்பட்டு விட்டதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார்.

எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்ற புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பதவியேற்பதற்கு தீர்மானமும் எடுக்கப்பட்டது என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹசீம் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். எனினும் அந்த உடன்படிக்கையிலும் பல திருத்தங்கள் தற்போது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# அரசின் நல்ல திட்டங்களை நான் ஆதரிப்பதற்கு தயார்

### பவித்ரா தெரிவிப்பு

அரசாங்கத்தின் நல்ல திட்டங்களை ஆதரிப்பதற்கு தயங்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாம் எதிர்க்கட்சியின் பணிகளை சிறந்த முறையில் செய்வோம். அப்பாவி கட்சி ஆதரவாளாகளின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும்.

நல்லவற்றுக்கு நாம் எப்போதும் ஆதரவளிப்போம். தீயவற்றுக்கு எதிராக குரல் கொடுக்கும் முதுகெலும்பும் எமக்கு உண்டு.

நல்ல திட்டங்களை அமுல்படுத்த கட்சி, நிற பேதங்கள் கிடையாது.

எனினும் நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் திட்டங்களை, ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவர முயற்சித்தால் அதற்கு எதிராக உயிரைப் பணயம் வைத்து போராடுவதற்கும் தயங்கப் போவதில்லை என பவித்ரா வன்னியாராச்சி கொழும்பு பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.



புதிய நாடாளுமன்றின் பங்களிப்பு பற்றி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## மன்னிப்போம் மறப்போம்

உலகப்புகழ் பெற்ற மாமனிதர்களில் இயேசு தனியிடம் பெறுகிறார். கருணை பொழியும் அவரது காந்த விழிகளும் அன்பு ததும்பும் அவரது மொழிகளும் உலகப்புகழ் பெற்று விட்டன.

மன்னிக்கிறவர்கள்...மன்னிக்கப்படுவார்கள் என்றும் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்கிற அருள் வசனமும் அழியாப் புகழ் பெற்றவை. இயேசு இதை அறிவிக்கிற அதே சமகாலத்தில் திருவள்ளுவர் இந்தியாவின் தென் முனையில் இருந்த படி இன்னா செய்தார்க்கு இனியவே செய்யக்கால் என்ன பயத்ததோ சால்பு என்று பைந்தமிழ் பைபிள் பாடி முடிக்கிறார்.

இயேசுவைக் கொப்பி அடித்து வள்ளுவரோ வள்ளுவரை வழி மொழிந்து இயேசுவோ இதைச் சொல்லி இருக்க முடியாது. சுய சிந்தனையுடன் தெய்வ அருள் பெறுகிற எல்லோரும் ஒரே மாதிரி அனுபவம் தான் பெறுகிறார்கள். எனவே மனிதனுக்கும் தெய்வத்திற்கும் எண்ணப் பாலம் அமைத்த இயேசுவும் வள்ளுவரும் ஒரே கருத்தையே கூறுகிறார்கள் என்பது மிக முக்கியமான ஒரு விடயம்.

கீதையிலும் கண்ணன் சொல்வதாக வியாசர் இதே கருத்தைக் கூறியிருப்பது ஆச்சரியமான விடயம். பதினாறாம் அத்தியாயத்தின் தொடக்கத்திலேயே தெய்வ குணங்களின் பட்டியல் சொல்லும் போது ஷமா (ஷமித்தல்–மன்னித்தல்) என்று கண்ணன் சொல்கிறார்.

இன்று நடக்கும் ஜாதிச் சண்டைகள் ,மதக் கலவரங்கள் இவற்றின் மூல காரணம் பலகாலப் பகை. எப்போதோ நடந்து விட்ட தவறுக்காகப் பழிவாங்கும் பகை உணர்ச்சி. மன்னிப்பு என்ற மலரைக் கடவுளுக்கு அர்ப்பணிக்காது பழி வாங்குதல் என்கிற பலாத்காரத்திற்கு மக்கள் தயாராகின்றார்கள். மதத்தின் பெயராலும் ஜாதியின் பெயராலும் கீழே விழும் ஒவ்வொரு பிணமும் தெய்வத்திற்கு எதிரானது. இதைக் கடவுளின் பெயரால் செய்கிற மூடர்களைக் கடவுள் மன்னிக்கவே மாட்டார்.

இஸ்லாம் என்ற சொல்லுக்கே சாந்தி என்று ஒரு பொருள் சொல்லுவார்கள். எனவே கண்ணன், இயேசு, நபிகள் எல்லோருமே மன்னிப்பை மகத்தான தெய்வீக இயல்பாகச் சித்திரிக்கும் போது அவர்கள் பெயராலேயே அடித்துக் கொள்ளும் தீவிர மதவாதிகள் யாவரும் தேவனின் எதிரிகளே. அசுர இயல்பினரே.

மன்னிப்பதன் மூலம் மன்னிக்கிறவன் உயருகிறானோ இல்லையோ மன்னிக்கப்படுகிறவன் உயருகிறான். எனவே பழியுணர்ச்சி, பகை நெடி இன்றி மன்னிப்பது மிக மிக அவசியம்.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது அவர் ஒரு கொள்கையில் உறுதியாக இருந்தார். தம்மிடத்தில் கருணை மனு கேட்கும் மரண தண்டனைக் கைதிகளை மன்னித்துத் தண்டனைக் காலத்தைக் குறைத்து விடுவார். மரண தண்டனையை நீதிமன்றங்கள் விதித்தாலும் அவர் ஜனாதிபதி என்கிற அதிகாரத்தை உபயோகப்படுத்தி இரத்துச் செய்வார். அதற்காக அவரைக் கடுமையாகப் பலர் விமர்சனம் செய்தார்கள்.

ஒரு யுத்தம் முடிந்து போர்க்களத்தை அவர் பார்வையிட்ட போது ஒரு இராணுவ வீரன் தன் கழுத்தில் இருந்த செயின் லாக்கெட்டை (பேழை) முத்தமிட்டபடி செத்துக் கிடந்தான். அந்த லாக்கெட்டில் அவன் மனைவி அல்லது காதலி படம் இருக்கலாம். அதை அவர்களிடம் சேர்க்க வேண்டும் என்று கருதி லாக்கெட்டை எடுத்த லிங்கன் அதிர்ந்து போனார். காரணம் அதில் இருந்தது ஆபிரகாம் லிங்கனின் படம்.

விசாரித்த போது உண்மை தெரிந்தது. அவன் மரண தண்டனை பெற்ற குற்றவாளி. லிங்கனால் மன்னிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை பெற்றிருந்தான். போர் வந்தது. சிறைக்கைதிகள் இராணுவப் பயிற்சி தரப்பட்டுப் போரில் ஈடுபடுத்தப்பட்டனர். போரில் அவன் நாட்டுக்காக தன் உயிரைத் துறந்து தியாகி ஆகி விட்டான்.

அதே உயிர் மரண தண்டனை மூலம் போயிருந்தால் அவமானம். அது நாட்டுக்காகப் பிரிந்ததால் அது வெகுமானம். மன்னிப்பு அவனைத் தியாகி ஆக்கி விட்டது. அந்த நன்றி உணர்வில் அவன் லிங்கன் படத்தை முத்தமிட்டபடி இறந்து போனான். மன்னிப்பதன் மூலம் துரோகிகளைத் தியாகிகள் ஆக்கலாம். தன்னைச் சிலுவையில் அறைந்நவர்களைக் கூட மன்னிக்கும் படி பரமபிதாவிடம் மன்றாடினார் இயேசு. ஆபிரகாம் லிங்கன் ஒரு உண்மையான கிறிஸ்தவர்.

இன்றைய பத்திரிகைச் சிறுகதை, தொடர் கதை, சினிமா, டி.வி. சீரியல் , மெகாத் தொடர் எல்லாமே பகை உணர்ச்சியைப் பண்ணை வைத்து உரமூட்டி வளர்க்கின்றன. இந்தக் காட்டுக் கூச்சலுக்கு மத்தியில் ஒற்றை மனிதனாக நான் மெல்லிய குரலில் கீதையும் பைபிளும் சொல்லுவது உங்கள் இதயங்களில் நுழையுமா தெரியவில்லை. எ ன்றாலும் உணர்ச்சி பூர்வமாகச் சொல்லுகிறேன். ஷமா...மன்னிப்பு உங்களைத் தேவனாக்கும். உங்களுக்கு எதிராக நடந்து கொண்ட எல்லோரையும் மனப் பூர்வமாக மன்னியுங்கள்.

மன்னிக்கச் சொல்லுகிற கீதை அதை விட நுட்பமான ஓர் உணர்வை, யாருமே நினைத்துப் பாராத ஒரு விடயத்தைத் தெய்வீகம் என்கிறது. பிறர் தன்னை மதிக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிற மெல்லிய ஏக்கம், இதுகூட தெய்வீகத்திற்கு இருக்காது என்று பிரகடனப்படுத்துகிறது.

காந்தி அடிகள் சொல்வார்: "தியாகம் செய்தவர்கள் தியாகம் செய்திருக்கி றோம் என்ற உணர்வோடு இருப்பது சரியல்ல..தியாகம் செய்திருக்கிறோம் என்ற எண்ணத்தையும் தியாகம் செய்தால்தான் தியாகம் பூரணமடைகிறது" என்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்டுக்கு நீதிபதி நரியா?

செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில், இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை குறித்து அமெரிக்கா ஒரு தீர்மானத்தை முன்மொழிய இருக்கி றது என அமெரிக்க வெளியுறவுத் துறையின் தெற்கு - மத்திய ஆசியாவுக்கான துணை செயலாளர் நிஷா பிஸ்வால் கூறியுள்ளார்.

மேலும், இலங்கை அரசுடன் கலந்தாலோசித்து இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலத்தில் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கை குறித்து மூன்று தீர்மானங்களைக் கொண்டு வந்த மேற்கு நாடுகளில், அமெரிக்கா முதன்மை வகித்தது. ஆனால், அமெரிக்காவின் போக்கு இப்போது தலைகீழாக மாறியுள்ளது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மேற்கண்ட கருத்தை உறுதி செய்யும் வகையில், சர்வதேச விசாரணையை இலங்கை அரசு ஒருபோதும் அனுமதிக்காது எனக் கூறியுள்ளார்.

தேர்தல் காலத்தில் அவர் பேசியபோது, சர்வதேச விசாரணைக்கு சிங்கள இராணுவத்தை ஒருபோதும் உட்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறினார்.

இலங்கையின் ஜனாதிபதியாக மகிந்த ராசபக்ஷ இருந்தபோது சீனாவுடன் மிக நெருக்கமான உறவு பூண்டிருந்ததையும், இலங்கையிலும் இந்துமாக்கடல் பகுதியிலும் சீனா காலூன்ற அனுமதித்ததையும் அமெரிக்கா விரும்பவில்லை.

எனவேதான், கடந்த காலத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் போர்க் குற்றங்கள், இனப் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் தீர்மானங்களைக் கொண்டு வந்தன. மேலும் ஐ.நா. விசாரணைக் குழு ஒன்றை அமைத்து விசாரணையும் நடத்தின.

விசாரணைக் குழு தனது அறிக்கையை அளித்தபோது, இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. எனவே, விசாரணைக் குழுவின் அறிக்கையை வெளியிடுவதை ஆறு மாத காலத்திற்கு தள்ளி வைக்க அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றின. இலங்கை அரசே விசாரணை நடத்தலாம் என அமெரிக்கா இப்போது கூறுகிறது.

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகள் குறித்து அமெரிக்கா முன்பு வடித்தது முதலைக் கண்ணீர். சிங்கள அரசை சீனாவின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவே இத்தகைய அழுத்தங்களை அமெரிக்கா கொடுத்தது. தனது நோக்கம் நிறைவேறியவுடன் அமெரிக்கா தனது நிலையை மாற்றிக் கொண்டது.

போர்க் குற்றங்கள் குறித்து கடந்த காலத்தில் அமெரிக்கா கடைப்பிடித்த நிலைப்பாடு என்ன? இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனியிலும், அந்நாடு கைப்பற்றிய நாடுகளிலும் வாழ்ந்த 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்கள் திட்டமிட்ட இனப் படுகொலைக்கு ஆளானார்கள். அவர்களுக்கு எதிராகப் போர்க் குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் இழைக்கப்பட்டன.

ஹிட்லரின் மரணத்திற்குப் பிறகு ஜேரமனியின் கடற்படைத் தளபதியான அட்மிரல் டோயன்டிஜ் தலைமையில் ஓர் அரசு அமைக்கப்பட்டது. இந்த அரசு சரணாகதி அடைய சம்மதம் தெரிவித்தது. எனவே, இந்த அரசைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என நேச நாடுகள் சார்பில் சிலர் ஆலோசனை வழங்கினர். டோயன்டிஜ் அரசின் மீது நடவடிக்கை எடுத்தால், ஜேரமனியில் குழப்பம் மேலிடும் என்றும் அவர்கள் கூறினார்கள். ஆனாலும், அமெரிக்கா இதற்கு சம்மதிக்கவில்லை.




போர்க் குற்றவாளிகளை விசாரிக்கும் பொறுப்பை இந்த அரசிடமே ஒப்படைக்கலாம் என அமெரிக்கா கூறவில்லை. போர்க் குற்றவாளிகளை விசாரித்தே தீரவேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடாக அன்று இருந்தது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் நாடு ஆகிய நான்கும் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு 8 ஆம் திகதி கூடி ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முக்கியப் போர்க் குற்றவாளிகள் மீது விசாரணை நடத்தித் தண்டிக்க வேண்டும் என்பதற்கான உடன்பாட்டில் கையெழுத்திட்டன.

இந்த உடன்பாட்டின்படி கீழ்க்கண்ட குற்றங்களை சர்வதேச இராணுவ நீதிமன்றம் விசாரிக்கும் என கூறப்பட்டது. போர்க் காலச் சட்டங்களையும், மரபுகளையும் மீறுதல் போர்க் குற்றமாகும். படுகொலைகள், மோசமாக நடத்துதல், அடிமைகளாக வேலை வாங்குதல் போன்றவையும் பொது மக்களையும், போர்க் கைதிகளையும் சித்திரவதை செய்தல், கொடுமை செய்தல், பாலியல் வன்முறைக்கு உட்படுத்துதல், பொது மற்றும் தனியார் சொத்துகளைச் சூறையாடுதல், நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றைத் திட்டமிட்டு அழித்தல் போன்றவை போர்க் குற்றங்களாகும்.

இந்த உடன்பாட்டிற்கிணங்க ஜேர்மனியில் உள்ள நூரம்பர்க், ஜப்பானில் உள்ள டோக்கியோ ஆகிய இரு இடங்களில் சர்வதேச இராணுவ நீதிமன்றங்கள் அமைக்கபட்டன. ஹிட்லரின் நாஜிக் கட்சி தலைவர்கள், இராணுவ தளபதிகள், வீரர்கள் ஆகியோர் மீது விசாரணை நடத்தப்பட்டு 12 பேருக்கு தூக்குத் தண்டனையும் ஏராளமானவருக்கு சிறைத் தண்டனைகளும் விதிக்கப்பட்டன.



-பழ.நெடுமாறன்-

அதைப்போல, டோக்கியோ சர்வதேச இராணுவ நீதிமன்றம் ஜப்பானியப் போர்க் குற்றவாளிகள் மீது விசாரணை நடத்தி உரிய தண்டனைகளை விதித்தது. யூத இனத்தையே அடியோடு அழிக்கும் வகையில் சித்திரவதைகள், படுகொலைகள், உயிருடன் எரித்தல், நச்சுப் புகையில் அடைத்துக் கொல்லுதல் போன்றவை ஈவு இரக்கமில்லாமல் செய்ததன் மூலம் மனித குலத்தையே தலைகுனிய வைத்தனர் நாஜிக்கள்.



சீன மக்களையும், தென்கிழக்கு ஆசிய மக்களையும் திட்டமிட்ட இனப் படுகொலைக்கு ஆளாக்கிய ஜப்பானியரையும் மனிதநேயத்தை மதியாத கொடுங்கோலர்கள் என உலகம் கருதியது.

2008 ஆம் ஆண்டு சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷீர் தனது நாட்டில் வாழ்ந்த 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆப்பிரிக்க மலைச் சாதி மக்களை இனப் படுகொலை செய்து அழித்தார் என்பதற்காக அவரையும், கம்போடியாவின் சர்வாதிகாரியான போல்பாட் 20 இலட்சம் மக்களைப் படுகொலை செய்தார் என்பதற்காக அவரையும் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டிக்க வைத்தன.

செர்பியாவின் சர்வாதிகாரியான சுலோபோடான் மிலோசேவிக் என்பவர் பல்லாயிரக்கணக்கான போஸ்னிய முஸ்லிம் களைப் படுகொலை செய்தார் என்பதற்காக ஐ.நா. படையின் மூலம் அவரைக் கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தின் முன் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் நிறுத்தின. ஆனால், விசாரணை முடிவதற்கு முன்னாலேயே அவர் சிறையில் இறந்து போனார்.

மேற்கண்ட நாடுகள் எதிலும் அந்தந்த நாடுகளின் அரசுகளே போர்க் குற்றவாளிகளை விசாரிக்கலாம் என அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஒருபோதும் கூறியதில்லை. சர்வதேச நீதிமன்றங்களின் மூலம் தான் அவர்களைத் தண்டிக்க வைத்தார்கள்.

ஆனால், இலங்கையில் சிங்கள இனவாத அரசே போர்க் குற்றவாளிகள் குறித்த விசாரணைகள் நடத்தலாம் என அமெரிக்கா கூறுகிறது. சிங்களத் தலைவர்கள் எத்தகைய இனவெறியர்கள் என்பதைக் கீழ்க்கண்ட ஆதாரங்கள் நிரூபிக்கின்றன.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தன பின்வருமாறு கூறினார்.

இந்திய அரசு எங்கள் மீது படையெடுக்க விரும்பினால் முழு இலங்கையையும் அவர்களால் 24 மணி நேரத்தில் கைப்பற்ற முடியும். என்னையும் கைது செய்ய முடியும். ஆனால், அவ்வாறு நடைபெறுமானால், இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவரையும் சிங்கள மக்களே அழித்து விடுவார்கள். சேனநாயகாவில் தொடங்கி சிறீசேனா வரை அனைத்து சிங்களத் தல்லவர்களும் தமிழர்களுக்கு எதிரான இனவெறிப் போக்கைக் கொண்டவர்களே ஆவார்கள்.

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவ பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவது ஒன்றே வழி எனக் கருதுபவர்கள் சிங்களத் தலைவர்கள். ஆனால், இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் இந்த உண்மையை உணர்ந்தோ, உணராமலோ சிங்கள இனவாத அரசிற்குத் தேவையான இராணுவ மற்றும் நிதியுதவிகளை தொடர்ந்து செய்து வந்திருக்கின்றன. இதன் மூலம் தமிழினப் படுகொலைக்குத் துணையாக இருந்துள்ளன.

இலங்கையில் தமிழர் பகுதியில் ஆறு பேருக்கு ஒரு இராணுவ வீரர் நிறுத்தப்பட்டிருக்கிறார். சின்னஞ்சிறிய நாடான இலங்கையில் இராணுவம், கடற்படை, விமானப்படை, காவல்படை ஆகியவற்றில் உள்ள மொத்த வீரர்களின் எண்ணிக்கை 4 இலட்சம் ஆகும்.

2009 ஆம் ஆண்டு போரில் வெற்றி பெற்ற பிறகு இராணுவ வீரர்களிடையே பேசிய மகிந்த ராசபக்ஷ போர்க்களத்தில் உங்களுடன் நாங்கள் இருந்தோம். இனியும் அவ்வாறே இருப்போம். உலகத்தின் முன்னால் உங்களை ஒருபோதும் அம்பலப்படுத்தித் துரோகம் செய்ய மாட்டோம் என்று கூறினார்.

போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மீது கொத்துக் குண்டுகளையும், இரசாயனக் குண்டுகளையும் வீசிப் படுகொலை செய்தவர் பொன்சேகா. ஆனால், மைத்திரி பதவிக்கு வந்ததும் அவருக்கு மீண்டும் இராணுவத்தில் பதவி கொடுத்து பீல்ட் மார்ஷல் பட்டமும் அளித் துப் பெருமைப்படுத்தினார். மைத்திரி ஆட்சியில் போர்க் குற்றங்கள் குறித்த விசாரணை நடைபெற்றால் அதன் விளைவு எப்படி இருக்கும்? நண்டுக்கு நீதி வழங்க நரியை வைத்ததுபோல் இருக்கும். ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகள் குறித்து அமெரிக்கா முன்பு வடித்தது முதலைக் கண்ணீர். தனது நோக்கம் நிறைவேறியவுடன் அமெரிக்கா தனது நிலையை மாற்றிக் கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைகீழாக கட்டி தொங்கவிட்டு நான்கு பேர் உயிருடன் எரிப்பு

## ஈராக்கில் ஐ.எஸ் அட்டூழியம்

(பக்தாத்)

**ஈராக்கில் 4 பேரை உயிருடன் எரித்துக் கொலை செய்து, அதன் வீடியோ காட்சியை இணையத்தளத்தில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிர வாதிகள் வெளியிட்டுள்ளனர்.**



அந்த குறிப்பிட்ட வீடியோவில் 4 பேர் இரும்புச் சங்கிலியால் தலை கீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்ட நிலையில், எரித்துக் கொல்லப்படும் காட்சி இடம் பெற்றுள்ளது. அந்த வீடியோவில் தோன்றும் முகமூடி அணிந்த தீவிரவாதி "ஈராக் அரசு படையினர் எங்கள் அமைப்பைச் சேர்ந்த 4 பேரை உயிருடன் கொளுத்தினர். அதற்குப் பழி வாங்கவே இப்போது 4 பேர் எரித்துக் கொல்லப்படுகின்றனர்" என தெரிவித்துள்ளான்.

மேலும், இந்த வீடியோவானது தலைநகர் பக்தாத்திலிருந்து 400 கிலோ மீற்றர் தொலைவில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமுள்ள ருட்பா நகரில் எடுக்கப்பட்டதாக வீடியோவில் தோன்றும் தீவிர வாதி தெரிவித்துள்ளார்.

சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த நான்கு பேரே உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளதாக ஐ.எஸ்.ஐ.எஸ். தெரிவித்துள்ளது.

இதேவேளை குர்ஆனில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உங்களை பழிவாங்கியவர்களை நீங்களும் பழிவாங்குங்கள் என்ற பொருளுக்கு அமைவாகவே இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஐ.எஸ்.ஐ.எஸ். வெளியிட்டுள்ள வீடியோவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

## உக்ரைன் பாராளுமன்றம் முன்பாக குண்டு வெடிப்பு

(கீவ்)

உக்ரைன் நாட்டின் பாராளுமன்ற கட்டடத்திற்கு வெளியே நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததால் அந்த பகுதியே புகை மண்டலமாக காட்சியளித்தது.

பிரிவினைவாத பிராந்தியங்களுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்ட முன்வரைவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்றத்திற்கு வெளியே ஏராளமானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாதுகாப்பிற்காக பொலிஸார் மற்றும் தேசிய பாதுகாப்பு படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

அப்போது, போராட்டக்காரர்கள் பகுதியில் இருந்து பாதுகாப்பு படையினரை நோக்கி வெடிகுண்டு வீசப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பின் போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், பொலிஸார், பத்திரிகையாளர்கள் என்று பலர் படுகாயமடைந்தனர். இதையடுத்து இரு தரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. (3-7)

## லிபிய கடலில் படகு கவிழ்ந்து 37 அகதிகள் உயிரிழப்பு

(டிரிபோலி)

லிபியாவில் நிலவி வரும் அரசியல் நெருக்கடி மற்றும் உள்நாட்டுப்போர் காரணமாக அந்த நாட்டைச் சேர்ந்த ஏராளமானோர் மற்றும் பிற ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக குடிபெயர்ந்து வருகிறார்கள். கடல் மார்க்கமாக செல்லும் அவர்கள், பழுதடைந்த படகுகளில் அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றிச் செல்வதால் அடிக்கடி நடுக்கடலில் கவிழ்ந்து விபத்தில் சிக்கி விடுகிறார்கள். இதனால் உயிரிழப்புகள் ஏற்படுகிறது.

இவ்வாறு இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இதுவரை லிபியா மற்றும் இத்தாலி கடற்பகுதியில் 2,400 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். சட்டவிரோதமாக ஐரோப்பாவிற்கு செல்ல முயன்றதாக 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை இத்தாலி கடற்படையினர் பிடித்துள்ளனர்.



இந்நிலையில், நேற்று முன்தினம் காலை, லிபியா கடற்பகுதியில் அகதிகள் சென்ற கப்பல் மூழ்கியதில் குறைந்தது 37 பேர் பலியாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கிழக்கு டிரிபோலியில் உள்ள கோம்ஸ் நகரில் மீனவர்கள் 30 இற்கும் மேற்பட்ட அகதிகளின் சடலங்களை மீட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதுபோன்ற செய்திகள் தொடர்ந்து வெளியாகி வந்தாலும், வாழ்வதற்கு வேறு வழியற்ற அகதிகள் தொடர்ந்து பெருமளவு பணம் கொடுத்து இந்த ஆபத்து நிறைந்த பயணத்தை மேற்கொள்கின்றனர். பயணத்திற்கு உதவாத கப்பல்களே அகதிகளின் இந்த ஆபத்தான பயணத்திற்கு பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (3-7)

## துருக்கியில் முதல் பெண் அமைச்சர்

(அங்காரா)

துருக்கியில் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது அக்மத் தவுதோக்லு தற்காலிக பிரதமராக பதவி வகிக்கிறார். அவரது அமைச்சரவையில் ஆய்சென் குர்கான் என்ற பெண் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

துருக்கி வரலாற்றில் இதுவரை பெண் அமைச்சர் யாரும் நியமிக்கப்படவில்லை. தற்போது இவர்தான் அமைச்சர் பதவி ஏற்றுள்ளார்.

இவருக்கு குடும்ப நலம் மற்றும் சமூக கொள்கை துறை ஒதுக்கப்பட்டுள்ளது. 3 குழந்தைகளின் தாயான அவர் இளைஞர் மற்றும் கல்வி அறக்கட்டளையின் உறுப்பினராக இருக்கிறார். இதன் செயல் தலைவராக ஜனாதிபதி ரீசெப் தய்யீப் எர் டோகனின் மகன் பிலால் எர் டோகன் பதவி வகிக்கிறார்.

சமீப காலமாக துருக்கி அரசு பெண்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளை நீக்கி வருகிறது. பாடசாலை மற்றும் அரசு நிறுவனங்களில் பெண்கள் தலையில் முக்காடு அணிவதற்கான தடையை நீக்கியுள்ளது. (3-7)

### விபத்தில் 38 பெண்கள் பலியானதையடுத்து

## மன்னருக்கு மனைவியை தெரிவு செய்யும் சுவாசிலாந்து நடன நிகழ்வு ரத்தானது



(அம்பபான்)

ஆபிரிக்காவில் உள்ள ஒரு சிறிய நாடு சுவாசிலாந்து. அந்த நாட்டை ஆட்சி செய்பவர் மன்னர் மஸவதி-III அந்த நாட்டில்சில ஆண்டுகளுக்கு ஒருமுறை புராதன விழா ஒன்று நடைபெறும். அதில் நாட்டின் அழகிய பெண்கள் கலந்து கொண்டு நடனம் ஆடுவார்கள். அந்த பெண்களில் ஒருவரை மன்னர் தனது புதிய மனைவியாக தேர்ந்தெடுப்பார்.

மன்னர் மஸ்வதி முன்னாள் 10 ஆயிரம் கன்னிப்பெண்கள் கலந்து கொள்ளும்பாரம்பரிய நடன விழா நடைபெறும். இதற்கான விழா நேற்று நடைபெறுவதாக இருந்தது.

ஆனால், இந்த விழாவுக்காக. 50 சுவாசிகன்னி பெண்கள் இரண்டு லொறிகளில் வந்து கொண்டு இருந்தனர். அப்போது அரசர் மஸ்வதி அரண்மனை உள்ள லோசிதா பகுதி மட்சபா ஹவே பாலத்தில், சென்று கொண்டிருந்த போது முன்னால் சென்று கொண்டிருந்த லொறி மீது பின்னால் வந்த லொறி மோதியது இதில் 38 பெணகள் பலியானார்கள். இதை தொடர்ந்து இந்த நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த பாரம்பரிய நடன விழா சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் நிகழ்ச்சியாகும். இந்த நடன நிகழ்ச்சியின் மூலம் மன்னர் தனது 15 ஆவது மனைவியை தேர்வு செய்து கொள்ள இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## நியூசிலாந்து எரிமலைகளுக்கு அடியில் ஏராளமான தங்கம், வெள்ளி கண்டுபிடிப்பு.

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் உள்ள வட தீவில், டூபாவ் எரிமலைப் பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களுக்கு அடியில் தங்கமும், வெள்ளியும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் புவியின் உட்புறத்தில் இருக்கும் வெப்பத்தைப் பற்றி ஆய்வு செய்துகொண்டிருந்த சர்வதேச புவியியல் வல்லுநர் குழு இதனை கண்டறிந்துள்ளது.

இப்பகுதியின் ஆறு நீர்த்தேக்கங்களில் நடத்தப்பட்ட ஆய்வின் போது கணக்கிட முடியாத அளவுக்கு தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள் நிறைந்திருப்பது தெரியவந்தது. ஏற்கனவே, இங்கு தங்கம் இருப்பதாக கூறப்பட்டு வந்தது. எனினும் எவ்வளவு தங்கம் இருக்கிறது? என்பதைப் பற்றி தெளிவாக தெரிந்திருக்கவில்லை.

'கைக்கெட்டியது வாய்க்கு எட்டாது' என்பது போல எரிமலைகளின் அடியில் இருக்கும் நீர்த்தேக்கங்களில் அதன் கீழ் அடுக்குகளில் உள்ள வெப்பத்தால், அங்கிருந்து இந்த உலோகங்களை வெளியில் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், 'இதற்கென ஒரு சரியான உபகரணம் தயார் செய்தால் ஆண்டுக்கு. 680 முதல் 7500 கிலோ கிராமுக்கு தங்கம் இங்கிருந்து எடுக்க முடியும் என்கின்றனர் புவியியல் வல்லுநர்கள்.

இந்த நீர்த்தேக்கங்களில் பூமியின் கீழ் அடுக்கில் உள்ள வெப்பத்தால் பல்லாண்டுகளாக, இதுபோன்ற விலைமதிப்பில்லாத உலோகங்கள் எரிமலையின் அடிப்பகுதிகளில் சேர்ந்து வருவதாக இந்த் ஆய்வில் தெரியவந்துள்ளது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழமான கருத்துக்களை சுருக்கமாகக் கூறும் பண்புள்ள தர்மலிங்கம்



**மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக 23 வருடங்கள் சிறப்பாக சேவையாற்றிய அமரர்.வி.தர்மலிங்கம் அவர்களின் 30 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்.**

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகவும் கறை படிந்த நாள் செப்டெம்பர் 2ஆம் திகதி 1985ஆம் ஆண்டு. அன்றுதான் தமிழ்பேசும் மக்களின் உன்னதமான இலட்சியத்துக்காக அல்லும் பகலும் உழைத்து போராடி சிறையிருந்து மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக 23 வருடங்கள் சிறப்பாகச் சேவையாற்றி படுகொலை செய்யப்பட்டதனால் மக்களின் இதயங்களில் தெய்வமாகிவிட்ட விஸ்வநாதர் தர்மலிங்கம் அவர்களின் 30ஆவது சிரார்த்ததினம் இன்று 02.08.2015 ஆகும்.

செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் 1918 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி சிறந்த கல்விமான் விஸ்வநாதருக்கும் மனைவி வள்ளிப்பிள்ளைக்கும் ஏகபுத்திரனாக உதித்து பண்டைய இராசதானியும் புதைபொருள் சிறப்புமிக்க கந்தரோடைக் கிராமத்தில் தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தார். இவரின் சிறுவயதிலேயே தந்தையாரும் தாயாரும் காலமாகிவிட்ட காரணத்தால் இவரின் பெரிய தந்தையாரான மாவட்ட சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சுப்ரமணியம் இவரைப் பராமரித்து பாதுகாவலராக இருந்து தர்மரை ஒரு குறையும் விடாமல் வளர்த்தெடுத்தார். தர்மர் தனது ஆரம்பக் கல்வியைக் கந்தரோடைக் கிராமத்திலும் பின்பு யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றார். இக்கல்லூரியில் கற்கும் காலத்தில் ஆங்கிலேயரான வணபிதா லோங் (Father Long) என்பவர் அதிபராக இருந்தார். அவரின் சீரிய கண்காணிப்பி லும் அரவணைப்பிலும் தர்மர் கல்வியில் சிறந்து விளங்கி லண்டன் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்தார்.

கல்லூரிப் படிப்பை நிறைவுசெய்து சட்டக் கல்லூரியில் கல்வி பயில் வதற்காக இருந்த பொழுது தர்மர் திருமண பந்தத்தில் ஈடுபடவேண்டும் என பெரியோர்களின் விருப்பத்திற்கிணங்க அமரரின் நெருங்கிய உறவினரான சுன்னாகம் வேலும் மயிலும்-விசாலாட்சிப் பிள்ளை தம்பதியரின் செல்வப் புதல்வி கமலாம்பிகையைத் திருமணம் செய்து சித்திரலேகா, சித்தார்த்தன் (இன்றைய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்) என இரு பிள்ளைச் செல்வங்கள் கிடைக்கப்பெற்றன.

இல்லறம் நல்லறமாக இருந்து தர்மர் கொழும்பு சட்டக் கல்லூரியில் சேர்ந்து பயிலும் காலத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமான அ.அமிர்தலிங்கம் அவர்களும் பயின்றார். இருவரும் நண்பர்களாக சட்டக் கல்லூரியில் தமிழ் மன்றத்தை உருவாக்கி தமிழ் உணர்ச்சியை வெளிப்படுத்திச் செயற்பட்டனர். சட்டக்கல்வி பயின்று கொண்டிருக்கும் போது தர்மருக்கு ஓர் பெரிய இழப்பு ஏற்பட்டது. அது என்னவெனில் அவரின் மனைவி கமலாம்பிகை காலமானதுதான். தனது பிள்ளைச் செல்வங்களைப் பார்க்க வேண்டும். கல்விபுகட்ட வேண்டும் என்ற தாகத்தினால் சட்டக் கல்லூரி படிப்புக்கு முழுக்குப்போட்டு வீடு திரும்பி தனது குடும்பப் பொறுப்பை ஏற்றார். தனது செல்வங்களை பராமரிக்கவேண்டும், சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும் என எண்ணி பெரியோர்களின் விருப்பத்துக்கிணங்க மனைவியின் இளைய சகோதரியான சரஸ்வதியை மறுமணம் செய்து காமதேனு என்ற பெயருடைய கந்தரோடை வீட்டில் வாழ்ந்து வந்தார்.

இங்கு வாழும் காலத்தில் உள்ளூராட்சி அரசியலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி உடுவில் கிராம சபையின் கந்தரோடை வட்டார உறுப்பினராக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் கிராம சபையின் தலைவராக பலவருடங்கள் சிறப்பாக கடமையாற்றினார். அக்காலத்தில் தர்மரை தர்மலிங்கம் என்றால் எல்லோருக்கும் தெரியாது. இவரை எல்லோரும் இலங்கையர் என்று அழைப்பதால் இலங்கையர் என்றால் தான் எல்லோருக்கும் தெரியும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளினாலும் தந்தை செல்வா மீது கொண்ட பற்றாலும் இவர் கட்சியில் சேர்ந்து 1960 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட உடுவில் தொகுதியில் அக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் உடுவில், மானிப்பாய் தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றியீட்டி 1983 ஆம் ஆண்டு ஆறாவது அரசியல் திருத்தச் சட்டத்திற்கு அமைய சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்ததனால் இவரின் பதவி நீக்கப்பட்டது.

தர்மர் தந்தை செல்வாவைப் போல் மேடைகளில் நீண்டநேரம் பேசுவதில்லை. இவர் கட்சியின் கொள் கைகளையும் தனது ஆழமான கருத்துக்களையும் மிகச்சாதாரண வார்த்தைகளில் நகைச்சுவையாக மக்களுக்கு விளங்கக்கூடிய முறையில் எவரையும் புண்படுத்தாமல் இரத்தினச்சுருக்கமாக கூறும் பண்பு உண்டு. தர்மர் சிறந்த கல்விமானாகவும் விளங்கினார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வித்தியோதைப் பல்கலைக்கழக சபையில் இவர் அங்கத்துவம் வகித்த காரணத்தால் இவர் பல அனுபவங்களைப் பெற்றிருந்தார். தமிழ்மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமா அல்லது திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமா என்ற விடயம் நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்ட போது தர்மர் ஒரு தேசிய இன ஒரு நாட்டினை உருவாக்குவதற்கு முன் அம்மக்கள் ஒரு பல்கலைக்கழகத்தினை நிறுவுதல் வேண்டுமெனக்கூறி வட இலங்கையும் கிழக்கிலங்கையும் இன மொழி பண்பாட்டு கலாசார மரபுகளைப் பேணிக் காப்பதற்கு தன்னிறைவு பெற க்கப்படவேண்டும் என வாதாடினார்.

தர்மர் இளைஞராக இருக்கும் போதே இடதுசாரிக் கொள்கைகளால் கவரப்பட்டு சாதிக்கொடுமைகளைத் துடைத்தெறிய துணிந்து செயற்பட்டார். பொதுவுடைமைச் சிந்தனைகளும் சோவியத் ரஷ்யாவின் பொருளாதாரத் திட்டங்களும் முன்னேற்றமும் அவரைக் கவர்ந்த போதிலும் அவர் இலங்கையில் உள்ள இடதுசாரிக் கட்சிகளில் சேர்ந்து ழைக்கவில்லை.

1972 ஆம் ஆண்டு கொல்வின் ஆர்.டி.சில்வா தலைமையில் இயங்கிய அரசியல் நிர்ணய சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த சமஷ்டி அரசியல் அமைப்பு யாப்பினை வரைவதில் தன்னந்தனியாக ஈடுபட்ட தர்மர் நாடாளுமன்றத்தில் புள்ளிவிபரங்களுடன் தகுந்த ஆதாரங்களுடன் சொற்பொழிவாற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

அக்காலத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு இனவாதக் கட்சி என்று சிங்களத்தீவிரவாதிகள் பிரசாரம் செய்து சமஷ்டி என்றால் நாட்டை பிரிப்பது என்று பிரசாரத்தில் ஈடுபட்ட போது அமரர் தர்மலிங்கம்மீது சிங்களத் தலைவர்கள் பலர் நம்பிக்கையும் நட்பும் வைத்திருந்தார்கள். தர்மர் அவர்களை சிங்களத்தலைவர்களும் புத்திஜீவிகளும் ஒருமனதாக ஆபிரிக்க ஆசிய விடுதலை இயக்கத்தில் மூத்த அங்கத்தவராகவும் சோவியத் நட்புறவுச் சங்கத்தின் முக்கியஸ்தராகவும் தெரிவுசெய்து கௌரவித்ததிலிருந்து இவர் ஓர் தேசியத் தலைவர் எனக் கொள்ளலாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகம் என்ற பெயருடைய தொழிற்சங்கத்தை உருவாக்கி பல வருடங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வந்தது.

ஒருமுறை அக்கழகத்தின் தலைவராக தர்மர் தெரிவு செய்யப்பட்டதையடுத்து அங்கு அடிக்கடி சென்று ஹற்றன் நகரில் நடைபெற்ற பல கூட்டங்களில் பங்குபற்றி இவர்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்திலும் வெளிப்படுத்தி நீதி கோரியவர்.

1972 ஆம் ஆண்டுக்குப் பின்பு அப்போதைய அரசினால் பல அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட காலத்தில் இவர்களை விடுதலை செய்ய சர்வதேச மன்னிப்புச் சபையிடம் (Amnesty International) தொடர்புகொண்டு இவர்களை விடுதலை செய்யப் பெரும் பாடுபட்டது மாத்திரமன்றி அவ் விளைஞர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருக்கு ஆறுதல் கூறி ஒவ்வொரு இளைஞர் குடும்பத்திற்கும் பண உதவி புரிந்த மனிதநேயம்மிக்க தலைவர் தர்மலிங்கம்.

தர்மர் அரசியலில் மட்டுமன்றி ஆன்மீகத்திலும் அதிக ஈடுபாடுடையவர். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அறங்காவலராக இருந்து ஆலய வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர்.

இன்று பல அநாதைப் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாக விளங்கும் அநாதைகள் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தவரும் இவரே.

**தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்**

என்பதற்கு இணங்க இன்று அவரின் ஏகபுத்திரன் சித்தார்த்தன் அரசியலில் தர்மரின் புத்திரன் என்பதை வெளிப்படுத்திப் பிரகாசிப்பது ஆறுதல் அளிக்கிறது. அரசியலும் சரி தனிப்பட்ட வாழ்க் கையிலும் சரி எதிரிகள் எவருமே இல்லாது வாழ்ந்து தான் சார்ந்திருந்த இயக்கத்திற்காக அதன் தூய்மையான கொள்கைகளுக்காகவும் உழைத்த உத்தம தலைவரான தர்மலிங்கம் படுகொலைப்பட்டதும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபருமான அ.அமிர்தலிங்கம் தனது செய்தியில் தமிழனுக்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்த தர்மர் தமிழனாலேயே கொலை செய்யப்பட்டார் என்று எண்ணும் போது ஒவ்வொரு தமிழனும் வெட்கத்தினால் தலைகுனிய வேண்டிய நிலையை இப்பாதகச் செயலைச் செய்தவர்கள் ஏற்படுத்திவிட்டார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

சொல்லிலும் செயலிலும் எவருக்குமே தீங்கு எண்ணாத நற்குணமும் நற்பண்பும் உள்ள உத்தம தலைவர் தர்மரை ஆயுததாரிகள் அழித்தாலும் மக்களின் இதயங்களிலிருந்து அவர் நினைவையும் அவர் கொண்ட இலட்சியத்தையும் என்றுமே அழிக்க முடியாது.

ஆ.சி.கணேசவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவரை சபாநாயகர் நியமிப்பார்

(கொழும்பு)

**எதிர்க்கட்சித் தலைவர் யாரென்பதை சபாநாயகரே தீர்மானிப்பார். சபாநாயகரின் முடிவே இறுதி முடிவாகும். தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பட்டியல் தயாரிக்கப்பட்டுவிட்டது என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சித் தலைவராக எவரது பெயரையும் அரசியல் கட்சிகள் பிரேரிக்கலாம். இதற்கு எந்தவிதமான தடையும் இல்லை.

ஆனால் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித்தலைவரை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் சபாநாயகருக்கே உள்ளது. எனவே எதிர்க்கட்சித் தலைவரை சபாநாயகரே தெரிவு செய்வார். அவரின் முடிவே இறுதி முடிவாகும். தேசிய அரசாங்கம் என்ற சிந்தனை திடீரென தோன்றியதல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு மைத்திரி, ரணில், சந்திரிகா என்ற முத்தரப்பு பேசசுவார்த்தைகளுக்கு அமைய இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதித்தேர்தல் முடிந்து மைதிரிபால சிறிசேன ஜனாதிபதியானதும், அடுத்து இடம்பெறும் பொதுத்தேர்தலுக்குப் பின்னர். இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசு ஏற்படுத்தப்படுமென இணக்கம் காணப்பட்டது. இதற்கமையவே பொதுத் தேர்தலின் பின்பு ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து தேசிய அரசை அமைக்கவுள்ளனர்.

தற்போது அமைச்சர்கள் பகிர்வில் இரண்டு கட்சிகளும் இணக்கப்பாடுகளை எட்டியுள்ளதோடு அமைச்சர்கள் பட்டியலும் தயாரிக்கப்பட்டுவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவர் தெரிவில் நான் தலையிடப் போவதில்லை

### *ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு*

எதிர்த்தரப்பு எம்.பிக்களில் பெரும்பான்மையினர் விரும்பும் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

எதிரக்கட்சித் தலைவர் தெரிவில் தான் தலையிடப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐ.ம.சு.மு. தலைவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் ஐ.ம.சு.மு. தலைவர்களுக்குமிடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் ஐ.ம.சு.முவாக இணைந்து செயற்படுவது உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டதாக அறிய வருகிறது.

இந்த சந்திப்பில் தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச, ஜனநாயக இடதுசாரி முன்னணி தலைவர் வாசுதேவ நாணயக்கார, மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்தன, தேச விமுக்தி மக்கள் கட்சி தலைவர், இலங்கை மக்கள் கட்சி தலைவர் உட்பட கட்சித் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது ஐ.தே.கவுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு ஐ.ம.சு.மு. தலைவர்கள் பலரும் தமது ஆட்சேபனையை தெரிவித்துள்ளனர். இந்த சந்திப்பு குறித்து கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ச எம்.பி,

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று நாம் அவருடனான சந்திப்பில் பங்கேற்றோம். ஐ.தே.க. எதிர்ப்பு ஆட்சியொன்றை ஸ்தாபிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினோம். கூட்டரசாங்கத்திற்கும் எமது எதிர்ப்பையும் தெரிவித்தோம். ஐ.தே.க. வுடன் இணைவதால் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஐ.ம.சு. மு.வுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் ஏற்படும் பாதிப்பு குறித்தும் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தோம்.

எதிர்த்தரப்பில் சுதந்திரமாக செயற்பட இடமளிக்குமாறும் அவரிடம் கோரினோம். எதிர்த்தரப்பில் இருக்கும் எம்.பிகளில் பெரும்பான்மையினர் விரும்பும் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க இடமளிக்குமாறும் கேட்டுக்கொண்டோம்.

தனக்கு விருப்பமானவாறு எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்ய தான் தயாராக இல்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, எதிர்த்தரப்பில அமரும் எம்.பிகள் தாம் விரும்பிய ஒருவரை தெரிவு செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இது தவிர ஐ.ம.சு.மு. தேசியப் பட்டியல் விவகாரம், ஐ.ம.சு.மு. செயலாளர் நியமனம் என்பன தொடர்பாகவும் இங்கு ஆராயப் பட்டுள்ளன.

இதேவேளை இந்தச் சந்திப்பு குறித்து கருத்துத் தெரிவித்த வாசுதேவ நாணயக்கார எம்.பி,

ஐ.தே.க. - ஐ.ம.சு.மு. தேசிய அரசாங்கம் அமைக்கும் ஒப்பந்தத்திற்கு எமது எதிர்ப்பை வெளியிட்டோம். எமக்கு இவ்வாறு எதிர்ப்பு வெளியிட இருக்கும் உரிமையை ஜனாதிபதி ஏற்றார்.

எதிர்த்தரப்பில் அமரும் எம்.பிகளின் விருப்பத்திற்கமைய எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்வதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# வீதியில் இறங்கிப் போராடுவோம்

### ஜே.வி.பி.எச்சரிக்கை

எதிர்க்கட்சித் தலைவர் பதவி அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டால் வீதியில் இறங்கிப் போராடுவோம் என ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளும் தகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கோ கிடையாது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றிற்கு ஆறு கட்சிகள் மட்டுமே தெரிவாகியுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உள்ளிட்ட நான்கு கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து கொணடுள்ளன.


எதிர்க்கட்சியில் எஞ்சியிருப்பது இரண்டு கட்சிகள் மட்டுமே. ஜே.வி.பி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிக்க வேண்டியது எதிர்க்கட்சியின் உறுப்பினரே தவிர ஆளும் கட்சியின் உறுப்பினரல்ல.

இதன்படி, சபாநாயகர் யார் எதிர்க்கட்சித் தலைவர் என தீர்மானிப்பார். எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்யும் உரிமை ஜனாதிபதிக்கு கிடையாது.

ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டால் அதற்கு எதிராக நாம் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம் என சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அநுரகுமார திஸாநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

## நல்லூரானுக்கு இன்று பதினைந்தாம் திருவிழா



## வேலிருக்க அஞ்சாதே மடமை நெஞ்சே!

கோபுரத்து மணியோசை கூடி நிற்கும்
கும்பிடுவோர் எழுப்புகிற குரலினோசை
நூபுரத்து அசைவதனால் பெண்களெல்லாம்
நுட்பமதாய் எழுப்புகிற மணியின் ஓசை
நாபியிலே இருந்தெழுந்து ஓங்குகின்ற
நன்மைதரு நாயனமாம் குழலின் ஓசை
பாபிகளின் அழும் ஓசை பரந்து எங்கும்
பாரெல்லாம் அதிர்ந்திடவே தேரும் சுற்றும்.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

## தீர்வொன்று தருவாய் திரு முருகா!

வருகின்றாய் நீ வீதிவலம்
வள்ளி தெய்வ யானையுடன்!
வருகின்றோம் உன் வாயிலுக்கு
வள்ளல் உனை வணங்கிடவே!
உருகியுந்தன் புகழ் பாடி
உமைபாலா உனைப் போற்றுகிறோம்!
தருவாயெம் குறை தீர்க்கத்
தீர்வொன்று திரு முருகா!

ப.மகேந்திரதாசன், நாயன்மார்கட்டு.

## நமக்கொரு தீர்வைத் தா முருகா!

வள்ளி, தெய்வயானையுடன் இன்று புள்ளி மயிலேறி
பக்தர்கள் புடைசூழ வீதிவலம் வரும்– முருகோனே
உன்னை நம்பியோரின் பாவவினை தீர்க்கும்
நல்லூர் பதியுறை வாழ்– அரியோனே
கான மயில் மீதேறி அசுரக்குடி சிதைத்து
தேவர் சிறை மீட்ட –திறலோனே
பாரினில் நம்மவர் பட்ட துன்பம் போதும் கந்தா
இந் நல்லாட்சியில் நம்மக்களுக்கு ஒரு தீர்வைத்தா–குமரோனே

கலாவித்தகர்– திருமதி மலர்விழி கனகசபை,
சண்டிலிப்பாய்.

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

அல்லலால் வாடு முந்தன்
அரும்பெரு மடியார் தங்கள்
தொல்லைக ளகற்றிச் சூழ்ந்த
தொல்வினை நீக்கிக் காக்கும்
வல்லமை யுனக்கே யுண்டு
வற்றாது கருணை யூற்று
இல்லிடஞ் செழித்து வாழ
இயக்குவாய் நல்லைக் கந்தா

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தை வைப்பதற்கு புரட்சிகரமான பெட்டி

## வைத்தியர்கள் சாதனை

இங்கிலாந்தின் கார்ன்வெல் கவுண்டியைச் சேர்ந்தவர் லீ. சரியாக 14 வயதில் இருந்தே இதயத்தில் கோளாறு ஏற்படத் தொடங்கியது. இதற்காக பல்வேறு மருந்துகளை உட்கொண்டார். 20 வயதில் திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு சரிந்து விழுந்தார். இதன் பின்னர் எலக்ட்ரிக் இதயம் பொருத்தப்பட்டு உயிர்வாழ்ந்து கொண்டிருந்தார். இதற்கிடையில், மனைவி, மகன் என்று வாழ்க்கை அதன் போக்கில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

இந்நிலையில் கடந்த மே மாதம் அவருக்கு மீண்டும் இதயத்தில் பிரச்சினை உண்டாகத் தொடங்கியது. உடனடியாக அவர் ஹயர்பீல்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மாற்று இதயம் தேவைப்படுவோருக்கான பட்டியலில் அவரது பெயர் உடனடியாக சேர்க்கப்பட்டது. ஆனால், அவருக்கு மாற்று இதயம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

அப்போது அவருக்கு மறுஜென்மம் கொடுக்கப்போகும் இதயம் ஐஸ் பெட்டியில்வந்தது. ஆனால், அதிலிருந்த இதயத்தில் துடிப்பு இல்லை. இதனால், அவருக்கு நடக்க இருந்த இதய மாற்று அறுவை சிகிச்சை கேள்விக்குறியானது. அப்போது, சமயோசிதமாக சிந்தித்த வைத்தியர்கள் தங்கள் திறமையை உபயோ கப்படுத்தி, நின்றுபோன அந்த இதயத்தை செயற்கையாக மீண்டும் துடிக்க வைத்தனர். சத்திரசிகிச்சைக்கான நேரம் நெருங்கும் வரை, அதனை உயிர்ப்புடன் வைத்திருந்த வைத்தியர்கள், அதை வெற்றிகரமாக லீக்கு பொருத்தினர். தற்போது அவரது உடல்நிலை நன்றாக தேறி உள்ளது.

மூளைச்சாவு அடைந்த ஒருவரின் இதயத்தை அதிகபட்சம் 30 நிமிடங்களுக்குள் மற்றொருவருக்கு பொருத்தியாகவேண்டும். தற்போது, ஹயர்பீல்டு வைத்தியர்கள், உருவாக்கிய புரட்சிகரமான 'பெட்டிக்குள் இதயம்' என்ற தொழில் நுட்பத்தின் மூலமாக அதிகபட்சம் 8 மணி நேரம் வரை இதயத்தை துடிப்புடன் வைத்திருக்க முடியும். இதனால், இனி இதய மாற்று அறுவை சிகிசசைக்காக காலக் கெடு ஒரு தடையாக இருக்காது. (3-7)

# மணிப்பூரில் வன்முறை மூன்று பேர் உயிரிழப்பு

## அமைச்சரின் வீடு எரிப்பு; ஊரடங்கு அமுல்



**(இம்பால்)** மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறையில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் காயம் அடைந்துள்ளனர். வன்முறையில் ஈடுபட்டவர்கள் மாநிலத்தில் அமைச்சர் எம்.எல்.ஏக்கள் வீடுகளுக்கு தீவைத்துள்ளனர். இதனால் அங்கு ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநில குடும்ப நலத் துறை அமைச்சராக இருப்பவர் புங்ஜபாங் டோன்சிம். சமீபத்தில் மணிப்பூர் மாநில சட்டமன்றத்தில் நிலசீர்திருத்தம், மணிப்பூர் மக்கள் பாதுகாப்பு உட்பட 3 சட்டமசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் ஒரு சட்டமசோதா நிறை வேற்றப்பட்டதற்கு 3 பழங்குடியின மாணவர் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து 12 மணி நேர வேலை நிறுத்தம் அறிவித்தன. இந்நிலையில், சுராசந்த்பூர் மாவட்டத்தில் உள்ள அமைச்சர் புங்ஜபாங் டோன்சிம் மற்றும் 5 எம்.எல். ஏக்கள் வீடுகளுக்கு நேற்று முன் தினம் மாலை சிலர் தீவைத்தனர்.

போராட்டம் நடத்திய அமைப்புகளை சேர்ந்தவர்கள் தான் இந்த தீவைப்புக்கு பின்னணியில் இருக்கக்கூடும் என்று பொலிஸார் கருதுகின்றனர். தீவைத்தவர்களை பொலிஸார் தேடி வருகிறார்கள். மணிப்பூர் மாநிலம் சுராசந்த்பூர் டவுன் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற வன்முறையில் 3 பேர் உயிரிழந்தனர். பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் 2 பேர் பலியாகினர் என்றும் ஒருவர் தீ வைப்பு சம்பவத்தில் சிக்கி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதில் 5 பேர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயம் அடைந்த வர்களில் இருவரது நிலை மிகவும் மோசமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது. (3-7)

### பாகிஸ்தானில் தற்கொலை தாக்குதல்


பாகிஸ்தானின் கைபர் பகுதி யில் நடத்தப்பட்ட தற்கொலை வெடிகுண்டு தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். 56 பேர் காயமடைந்தனர். ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள கைபர் பகுதியிலுள்ள ஜாம்ரூத்தில் இந்த தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வெடிகுண்டு தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 56 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காயமடைந்தவர்களில் பலரதுநிலை மிகவும் கவலைக்கிடமாக வுள்ளது என்று தெரிவிக்கப்பட்டு ள்ளது. (3-7)

# 5 இலட்சம் ரூபா செலவில் உலகின் மிகப்பெரிய புத்தகம்

## 33 அடி உயரமானது

அரியானா மாநிலத்தில் 96 மணி நேரத்தில் உருவாக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய புத்தகம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறவுள்ளது.

பரீதாபாத்தில் சமண மதத்தைச் சேர்ந்த புரட்சிகர துறவி முனி ஸ்ரீ தருண் சாகரின் சொற்பொழிவுகள்



அடங்கிய புத்தகம் 2,000 கிலோ எடையில், 33 அடி உயரம், 22 அடி அகலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

96 மணி நேரத்தில் புத்தகத்தை உருவாக்கும் பணியில் 25 தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

இதற்கு ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. எதிர்வரும் ஞாயிறன்று நடைபெறும் விழாவில் உலகின் மிகவும் சிறிய பெண்ணான நாக்பூரைச் சேர்ந்த ஜோதி ஆம்கே இந்த புத்தகத்தை வெளியிடுகிறார்.

கின்னஸ் உலக சாதனை புத்தகம் மற்றும் லிம்கா சாதனை புத்தகத்தில் பதிவு செய்வதற்காக நிபுணர்கள் குழுவினர் கலந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-7)

### அமிதாபச்சன் அசௌகரியம்

(மும்பை)

இந்தி நடிகர் அமிதாப்பச்சனின் சமூக வலைத்தள கணக்கில் விஷமிகள் ஊடுருவி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் தனது கைத்தொலைபேசிக்கு இழிவான குறுந்தகவல்கள் வருவதாக அவர் பொலிஸில் புகார் செய்துள்ளார். இந்தி நடிகர் அமிதாப்பச்சன் தன்னுடைய பட விபரம் மற்றும் அன்றாட நிகழ்வுகள் உள்ளிட்டவற்றை அவ்வப்போது டுவிட்டரில் வெளியிடுகிறார். இதனை ரசிகர்கள் ஆர்வத்துடன் பார்க்கின்றனர். டுவிட்டரில் அவரை 44 ஆயிரம் ரசிகர்கள் பின்தொடர்ந்து வருகிறார்கள்.

இந்த நிலையில், அவருடைய டுவிட்டர் கணக்கில் விஷமிகள் முறைகேடாக ஊடுருவி இருப்பது தெரியவந்துள்ளது. இது அமிதாப்பச்சனை மட்டுமின்றி ரசிகர்களையும் திக்குமுக்காட செய்துள்ளது. இந்த ஊடுருவல் காரணமாக தன்னுடைய டுவிட்டர் தளத்தில் விஷமிகள் செக்ஸ் பதிவை வெளியிடக்கூடும் என்று அமிதாப்பச்சன் பதற்றத்தில் ஆழ்ந்துள்ளார். (3-7)

# கை முறிந்த பாலஸ்தீன சிறுவன் இஸ்ரேல் படைவீரருடன் மோதல்

முறிந்த கையோடு இருக்கும் பாலஸ்தீன சிறுவன் ஒருவனை துப்பாக்கி முனையில் மடக்கி பிடிக்கும் இஸ்ரேல் வீரர் ஒருவருடன் இரு பாலஸ்தீன பெண்கள் மற்றும் சிறுமி ஒருவர் மோதலில் ஈடுபடும் புகைப்படம் சமூகத்தளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள மேற்குக் கரையின் நபி சலாஹ் கிராம த்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. அங்கு உள்ளூர்வாசிகள் மற்றும்செயற்பாட்டாளர்கள் இணைந்து இஸ்ரேலின் தடுப்புச் சுவர் எழுப்பும் நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணி நபி சலாஹ் கிராமத்தில் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது.

இதன்போதே 12 வயதான முஹமது பஸீம் தமீம் என்ற சிறுவனை இஸ்ரேல் வீரர் ஒருவர் மடக்கி பிடித்து அவரை கைது செய்ய முயன்றுள்ளார். அதற்கு எதிராக அந்த சிறுவனின் தாய், சகோதரி மற்றும் சித்தி ஆகியோர் அந்த வீரரிடம் இருந்து சிறுவனை விடுவிக்க முயன்றுள்ளனர்.

இந்த சம்பவம் நிகழ்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் குறித்த கிராமத்தின் மீதான இஸ்ரேலிய சுற்றிவளைப்பின் போது அந்த சிறுவனின் கை முறிந்துள்ளது.

படையினர் மீது கல் எறிந்ததாலேயே சிறுவனை கைது செய்ய முயன்றதாக இஸ்ரேல் தரப்பு குறிப்பிட்டுள்ளது. எனினும் சிறுவனை விடுவித்த அவரது குடும்பத்தினர் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். (3-7)

# மன்னரின் பெயரை நீக்கி கலாமின் பெயர் வைப்பு

## முஸ்லிம் அமைப்பு எதிர்ப்பு

இந்திய முஸ்லிம்கள் நல கட்சி தலைவரும், அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரிய உறுப்பினருமான இலியாஸ் இது பற்றி கூறுகையில்,

டில்லி அவுரங்கசீப் சாலையை அப்துல்கலாம் சாலை என்று பெயர் மாற்றியது திட்டமிட்ட செயல். இதோடு இது நின்றுவிடாது. மராட்டிய மாநிலத்தில் அவுரங்கசீப் நினைவிடம் அமைந்துள்ள அவுரங்காபாத் மாவட்டத்தின் பெயரை மாற்றுவோம் என்று சிவசேனா கூறியுள்ளது. வரலாற்றில் இடம் பெற்றுள்ள முஸ்லிம் பேரரசர்களின் பெயர்களை கொண்டுள்ள நகரங்கள், வீதிகள் பட்டியலை அவர்கள் வைத் துள்ளனர். அவுரங்கசீப் இந்துக்களுக்கு எதிரானவர் அல்லா, அவர் பல கட்டடங்களுக்கும், கோவில் களுக்கும் நிலம் வழங்கிய மதசார்பற்றவர். எனவே இவ்வாறான செயற்பாடுகளை சிவசேனா கைவிட வேண்டும் என அவர் கூறியுள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தை பிறரை அவலத்துக்கு உள்ளாக் குவதிலேயே கழிக்கின்றனர். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பஞ்சவர்ண நரியார் நாடகம் பார்த்தேன்

யாழ்ப்பாணம் செயல்திறன் அரங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூரில் நாடகத் திருவிழா நடைபெற்று வருகிறது.

நேற்றைய தினம் நாடகத்தைப் பார்க்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. மருந்துக்குப் போராட்டம், மரணச் சான்றிதழ், பஞ்சவர்ண நரியார் ஆகிய மூன்று நாடகங்கள் நேற்று அரங்கேற்றப்பட்டன.

முதல் இரண்டு நாடகங்களும் ஓராள் நாடகம். இதில் மரணச்சான்றிதழ் என்ற நாடகம் பார்ப்போர் உள்ளத்தை நெருடவைத்தது.

காணாமல்போன தன் கணவனுக்காக இளம் மனைவி காத்திருப்பதன் சோகம் வெளிப்படுத்தப்பட்டது.

காணாமல்போன தன் கணவன் பற்றி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த பின், வீட்டுக்கு வந்த கடிதம் மரணச் சான்றிதழாக இருந்தபோது நிலைமை எப்படியிருந்தது என்பது உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தப்பட்டது.

இதேபோல் மருந்துக்குப் போராட்டம் என்ற நாடகமும் சமகால சூழ்நிலையை எடுத்தியம்பியது. நாடகங்கள் மிக அற்புதமாக அமைந்திருந்தன.

இதில் நாடறிந்த நாடக ஆசிரியர் குழந்தை சண்முகலிங்கத்தின் பஞ்சவர்ண நரியார் என்ற சிறுவர்களுக்கான நாடகம் என்னை இரு நிலைப்படுத்தியது.

அதில் ஒன்று என்னைச் சிறுவனாக்கி அந்த நாடகத்தை இரசிக்கச் செய்தது.

அடுத்தது நான் ஒரு வயது வந்தவன் என்று நினைத்தபோது, ஒரு தத்துவத்தை உணர வைத்தது. எனினும் இந்த உணர்வை ஏற்படுத்துவது நாடகத்தின் நோக்கமல்ல. அது பார்ப்போரின் மன நிலைப்பட்டது என்பதை முதலில் சத்தியப்படுத்துகிறேன்.

இனி வருவது நாடகக் கதை.

காட்டில் இருந்த நரியார் ஒருவர் நாட்டுக்கு வந்திருந்தார். ஒரே மழை; இடிமுழக்கம். அங்கிருந்த வீடு ஒன்றில் தங்கியிருந்தார். அந்த வீட்டிற்கு வர்ணப் பூச்சுவேலை நடந்திருந்ததுடன் வீட்டுக்குள் [illegible]ந்தை சிதறியும் இருந்தது. வீட்டுக்குள் இருந்த நரியாரின் உடம்பு முழுவதும் பஞ்சவர்ணம். இப்போது நரி தன் காட்டுக்குச் செல்கிறது.

நரியாரின் கோலம் கண்ட காட்டு மிருகங்கள் மற்றும் பறவைகள் தலைதெறிக்க ஓட்டம் எடுத்தன. காட்டுக்குப் புதிய மிருகம் ஒன்று வந்துள்ளது என்பதே ஓட்டத்துக்கான காரணம்.

இதைத் தனக்குச் சாதகமாக்க நினைத்த நரியார், தானே இந்தக் காட்டின் ராசா என்று அறிவித்ததுடன் ஆகாயத்தில் இருந்து தான் வருவதாகவும் கூறிக் கொண்டது. முதலில் காட்டு மிருகங்கள் நரி கூறியதை நம்பினவாயினும் பின்னர் அவை சிந்திக்கத் தலைப்பட்டன.

பஞ்சவர்ணத்தோடு வந்திருப்பது நரி என்பதை உணர்ந்து கொண்ட காட்டு மிருகங்கள்; நரிக்கு முடிசூட்டு விழா நடத்துவதாக ஏற்பாடு செய்து, பல்லக்கில் தூக்கிச் சென்று ஒரு நீர் நிலையில் போட்டு விட்டன அவ்வளவுதான். நீர் நிலையில் போட்ட நரியை காட்டு மிருகங்கள் கூட்டாக இழுத்து வெளியே எடுத்தபோது நரியின் சாயம் வெளுத்திருந்தது.

இப்போது நரி கூறுகிறது "என்னை எல்லோரும் மன்னித்து விடுங்கள். நாட்டுக்குப் போன போது ஒரு வீட்டுக்குள் தங்கியதால் இந்த பஞ்சவர்ணம் என்னில் ஒட்டிக் கொண்டது. அது கண்டு நீங்களும் பயந்து ஓடியதால் இந்தக் காட்டின் ராசாவாக வர நான் நினைத்தேன். என்னை மன்னியுங்கள்" என்கிறது.

அட! வீட்டில் இருந்து யார் வந்தாலும் அவர்களை உத்தமர்களாக நினைத்து வாக்களிக்கும் எங்கள் மக்கள் நரிகளை ஒதுபோதும் இனங்கண்டதில்லை.

நாட்டுக்குள் சென்ற நரி, வீட்டுக்குள் இருந்து பஞ்சவர்ணத்தோடு கோலம் மாறி காட்டுக்கு வந்த போதும் வந்தது நரி தான் என்பதை அந்தக் காட்டு மிருகங்கள் கண்டறிந்து, அதற்குப் பாடம் படிப்பித்தன. இதை நினைத்தபோது, ஐயா! சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்கிறது ஒரு தரப்பு. அதன் அடுத்த தரப்பு சர்வதேச விசாரணையை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றுகிறது. இப்போது நமக்கு இருக்கக்கூடிய சந்தேகம், சர்வதேச விசாரணை முடிந்து விட்டால் உள்ளக விசாரணை எதற்கு? என்பதுதான்.

# அடகு நகைகளை மீட்க காணாமற் போனவர்களின் மரணச்சான்றிதழ் கேட்கும் வங்கி முகாமைத்துவம்

மன்னாரில் உள்ள சில வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்கச் செல்லும் கணவனை பறிகொடுத்த குடும்பப்பெண்களிடம் வங்கி முகாமைத்துவம் கணவனின் மரணச்சான்றிதழை கேட்பதாக பாதிக்கப்பட்ட பெண்கள் மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாக மன்னார் பிரதேச சபையின் முன்னாள் உப தலைவரும், மன்னார் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தருமான அந்தோனி சகாயம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ' மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் யுத்தத்திற்கு முன்பும், யுத்தத்திற்கு பின்னரும் பலர் கடத்தப்பட்டுள்ளனர், பலர் காணாமல் போயுள்ளனர்.

இவர்களில் பலர் குடும்பத் தலைவர்களாகவும் உள்ளனர். இந்த நிலையில் குறித்த குடும்பத்தலைவர்கள் கடத்தப்படுவதற்கு அல்லது காணாமல் போவதற்கு முன்னர் தமது குடும்ப தேவைகளுக்காக மனைவி அல்லது பிள்ளைகளின் நகைகளை வங்கிகளில் அடகு வைத்து பணத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தமது கணவர் அடகு வைத்த நகைகளை மீட்கும் பணியில் காணாமல் போன குடும்பத் தலைவர்களின் மனைவிகள் ஈடுபட்டு வருகின்ற போதும் மன்னாரில் உள்ள சில வங்கிகளின் முகாமைத்துவம் காணாமல் போன தமது கணவனின் மரணச்சான்றிதழை கேட்கின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பல பெண்கள் மன்னார் பிரஜைக்கள் குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாக மன்னார் பிரதேச சபையின் முன்னாள் உப தலைவரும்,மன்னார் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தருமான அந்தோனி சகாயம் மேலும் தெரிவித்தார்.(2-250)

# விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை முதல் நல்லூரில்

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணியினரும் ADIC போதை எதிப்பு அமைப்பினரும் மற்றும் Rotary கழகமும் இணைந்து நடத்தும் நோயற்ற வாழ்வு எனும் விழிப்புணர்வு கண்காட்சி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் சிவன் கோவிலுக்கு அருகிலமைந்துள்ள யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வு பூங்காவனத் திருவிழா வரை முற்பகல் 10 மணியிலிருந்து இரவு 8 மணி வரையும் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது. "இளைஞர்கள் எதிர்கொள்ளும் இன்றைய சவால் களை எதிர்கொண்டு முறியடிப்போம்" எனும் தொனிப்பொருளில் நடைபெற ள்ள இந்நிகழ்வில் ஒளி நாடாக்கள் காண்பிக்கப்படவுள்ளதுடன் சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தும் போதைக் குறைப்பு வழிமுறைகள் பற்றிய தெளி வூட்டல்களும் இடம் பெறுவதுடன் Quizze போட்டிகள், சிறுவர்களுக்கான போட்டிகள் என்பனவும் இடம் பெறும். இதன் ஒரு அங்கமாக, வீதி யோர நாடகங்கள், தனி நபர் நடிப்புக்கள் என்பனவும் நிகழவுள்ளன.

சகல தரப்பினரையும் குறிப்பாக மாணவர்கள், பெற்றோர்கள் இந்நிகழ்வினைப் பார்வையிட்டுப் பயன்பெறுமாறு கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். (இ-9)

## உரிமை கோரப்படாத சடலம் காணப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத நிலையில் சடலம் ஒன்று காணப்படுகிறது.

தேவமணியம் (வயது-56) என்பவரது சடலமே இவ்வாறு உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.

கடந்த 30ஆம் திகதி விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குறித்த நபர் மறுநாள் 31ஆம் திகதி திங்கட்கிழமை உயிரிழந்தார்.

ஆனால் இதுவரை குறித்த சடலம் எவராலும் உரிமை கோரப்படவில்லை. எனவே உரிமை கோரப்படா நிலையில் உள்ள மேற்படி சடலத்தினை உறவினர்கள் பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கே.நந்தகுமார் அறிவித்துள்ளார். (செ-5)

## தலைக்கவசம்; தடை நீடிப்பு

முழு முகத்தினையும் மூடுகின்ற வகையில், தலைக்கவசம் அணிந்து மோட்டார் வாகனம் செலுத்துவதற்கான தடை நீடிக்கப்பட்டுள்ளதாக, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

ஏற்கெனவே இதற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டிருந்தமை மீண்டும் தடை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கில், எதிர்வரும் ஒக்டோபர் 13ஆம் திகதி வரை இத்தடை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் வங்கிக் கொள்ளைகள், துப்பாக்கிச் சூடுகள் போன்றவற்றுக்கு முழு முகத்தினையும் மூடுகின்ற தலைக கவசம் பயன்படுத்தியமை குறித்து அதிகம் விமர்சிக்கப்பட்டிருந்தது. (செ-12)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதலாவது அரையிறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியும், இரண்டாவது அரையிறுதியில் யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து சென். ஹென்றிஸ் கல்லூரியும் மோதவுள்ளன.

இறுதிப் போட்டி நாளை வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது. (க)

## தேவாரக் கச்சேரி

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தை யொட்டி கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரனின் தேவாரக் கச்சேரி நிகழ்வு இன்று புதன்கிழமை இரவு 7மணிக்கு கோவில் வீதியில் [illegible] ஸ்ரீ [illegible] திர ஆலய மண்டபத்தில் பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளன.(இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்மயா மிஷன்

நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வலம்புரி பத்திரிகையின் இணை அனுசரணையுடன் இணைந்து நடத்தும் இந்துவாக வாழ்வோம் வினாவிடைப்போட்டி

வினா: 6)a) இருவகையான எண்ணங்களை இயற்கையோடு குறித்து நிற்கும் படம் எது?

b)(I) நல்லாரை........................

தீயாரை.......................... (ஔவை)

(II) மனம் என்றால் என்ன?

(III) இந்த படத்திலிருந்து நீர் தெரிந்து கொள்வது யாது?

வினாக்களுக்கான விடைகளை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்துவாக வாழ்வோம் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தற்பெருமை அழிவைத் தரும்






✦ மருத்துவர்கள் நோயாளிகளிடம் "எனக்கு வியாதியே இல்லை" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும்படி அறிவுரை கூறுகின்றனர். நோயாளிகள் அப்படிச் சொல்வதனால் வியாதிகள் அகலுவதற்கான சாதகமான நிலை உண்டாகிறது. அதுபோல, இவ்வுலகில் நீ தாழ்ந்தவன் என்று எண்ணிக் கொண்டால், சீக்கிரத்தில் தாழ்ந்தவனாகவே ஆகிவிடுவாய். அளவிட முடியாத அளவிற்குத் திறமை உன்னிடம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டால், அவ்வாறே திறமைகள் மிகுந்தவனாய் ஆகிவிடுவாய்.

✦ கல்லானது தண்ணீருக்குள் வருடக்கணக்கில் கிடந்தாலும் அதனுள் தண்ணீர் நுழையாது. ஆனால், களிமண் தண்ணீருக்குள் கிடந்தால் கரைந்து விடும். அதுபோல திடமான நம்பிக்கையுள்ள மனமுள்ளவர்கள், சோதனையால் தடுமாற்றம் அடைவதில்லை. நம்பிக்கை இல்லாதவருடைய மனம் சிறு காரணத்திற்கு கூட சலனமடையும்.

✦ குருவின் சக்தியின்மீது திடமான நம்பிக்கை கொண்ட ஒரு சிஷ்யன், குருவின் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மீது நடந்து போனான். இதைக் கண்ட குரு "என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கிறதென்றால், எனக்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும். இது எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே என்று நினைத்தபடியே, அவரும் தண்ணீரின் மீது நடக்க ஆரம்பித்தார். ஆனால், கால் வைத்தவுடன் மூழ்கிவிட்டார். நம்பிக்கையால் அபூர்வமான காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால், தற்பெருமை அழிவைத் தரும்.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் கழகங்களுக்கிடையிலான வி.விழா

## ஈஸ்வரன் இளைஞர் அணி வெற்றி




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடாவருடம் நடத்தப்படும் விளை யாட்டு விழாவின் இவ்வருடம் 27 ஆவது தேசிய விளையாட்டு விழாவிற்கான முல் லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாகடந்த ஞாயிற்றுக்கிழமை மாங் குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

மாலை உதைபந்தாட்ட இறுதிப் போட்டி யும் பரிசில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது. உதைபந்தாட்ட போட்டியிலே பரந்தா மன இளைஞர் கழக அணியை எதிர்த்து போட்டி யிட்ட ஈஸ்வரன் இளைஞர் கழக அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட குழு விளையாட்டுக்கள் மற்றும் தடகள போட்டிக ளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான சான்றித ழ்களும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. விசேடமாக 26 வது தேசிய விளையாட்டு விழாவில் தேசியமட்டத்தில் முப்பாயச்சல் போட்டியிலே 3 ஆம் இடத்தினை பெற்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் இளைஞா கழகத்தை சாா்ந்த செல்வி புஸ்பராசா சுகன்ஜாவை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (க)

# பரபரப்பான போட்டியில் டயமனை வீழ்த்தி 3ம் சுற்றுக்கு முன்னேறியது பொம்மர்ஸ்





நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்தும் வட மாகாண ரீதியான உதைபந்தாட்டப் போட் டியில் 31.08.2015 அன்று முதல் போட்டியாக டயமன்ஸ் வி.க. எதிர் பொம்மர்ஸ் வி.க. மோதின. பலத்த ரசிகர்களின் ஆதரவுடன் இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் தமது வியூகங்களை மாற்றியமைத்து விளை. யாடிய போதும் எந்த அணியாலும் ஒரு கோல் கூட பெற்றுக்கொள்ள முடியாமல் போன மையால் போட்டி சமநிலை தவிர்ப்பு உதைக்கு தள்ளப் பட்டது. சமநிலை தவிர்ப்பு உதை யில் டயமன் அணி சார்பாக இரண்டாவது உதையினை அடித்த லக்சிசனின் உதை யில் பந்து கோல் கம்பத்தில் பட்டு வெளியே சென்றதால் சுதாரித்துக்கொண்ட பொம் மர்ஸ் வி.க. வாய்ப்பினை துல்லியமாக பயன்படுத்த ஐந்தாவது உதையினை அடி த்த பிரேம்குமாரினது (பீமா) உதையினை சரியாகக் கணி த்து கோல்காப்பாளர் வைகு ந்தன் தடுக்க வெற்றி உறுதி செய்யப்பட்டு 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 3ஆம் சுற்றுக்குள் நுழைந்தது.


போட்டியில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்ப டுத திய உதயராஜ் ஆட்டநாயக னாக தெரிவு செய்யப்பட்டு முன்னாள் கழக உறுப்பினர் ப.மனோராஜ் பதக்கம் அணி விக்க அணிக்கான பரிசை மூத்த கழக ஆலோசகர்து.துரை ராஜா வழங்கி கௌரவி த்தார்.

பொம்மர்ஸ் மூன்றாம் சுற்றில் மன்னார் சென. ஜோசப் அணியினை சந்திக்க வுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி மணலாறு பிரதேச அணி சம்பியன்




தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் விளை யாட்டு விழாவின் இவ்வ ருடம் 27 வது தேசிய விளை யாட்டு விழாவிற்கான முல் லைத்தீவு மாவட்டமட்ட கரப் பந்து போட்டி கடந்த ஞாயிற் றுககிழமை மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இடம்பெற்ற இறுதிச் சுற்றுப்போட்டியில் மணலாறு பிரதேச அணி யினர் முதலாம் இடத்தினை யும் ஒட்டுசுட்டான் பிரதேச அணியினர் 2 ஆம் இடத் தையும் பெற்றுக் கொண் டனர். (க-281)



தேசிய மட்டத்தில் குத்துச் சண்டைச் சங்கத்தால் நடத்தப்பட்ட (BASL) குத்துச் சண்டைப் போட்டியில் 15 வயது ஆண்கள் பிரிவின் 66 -70Kg எடைப்பிரிவினர் வெள்ளிப் பதக்கம் பெற்ற யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் அ.டெனிசன், 80 Kg இற்கு மேற்பட்ட எடைப்பிரிவில் வெண்கலப்பதக்கம் பெற்ற கு.டிலக்சன் ஆகியோருடன் அதிபர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் பொறுப்பாசிரியர் ஆகியோரைப் படத்தில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையுடனான டெஸ்ட் தொடரை 22 வருடங்களுக்கு பின்னர் இந்திய அணி கைப்பற்றியது. நேற்று நிறைவடைந்த 3ஆவது போட்டியில் 117 ஓட்டங்களால் வெற்றிபெற்றதன் மூலம் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. (கு)

# மறுக்கப்படுகின்ற எமக்கான நீதியை துணிவுடன் நாம் கேட்டு பெற வேண்டும்

## வடக்கு அமர்வில் முதலமைச்சர் உரை

(யாழ்ப்பாணம்)

நீதி மறுக்கப்பட்ட ஒரு சமூகத்துக்கு எது நீதி என தோன்றுகின்றதோ அதனை துணிவுடன் கேட்க வேண்டும்.

அவர்கள் ஆதரிக்க மாட்டார்கள்; இவர்கள் தரமாட்டார்கள் என நினைத்து எமக்கான நீதியை நாமே மறுப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என வட மாகாண முதமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் கூட்டத் தொடரில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளருடனான சந்திப்பில் இலங்கை விடயத்தில் சர்வதேச உள்ளிடல் அவசியம் என வலியுறுத்தியிருந்தோம்.

முழுமையாக உள்ளகப் பொறிமுறை ஒன்று இருத்தல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை ஏற்படாது எனவும் கூறியிருந் தோம்.

எம்முடைய நீதி மறுக்கப்பட்டுள்ளது. அதனை பெற்றுக் கொள்ளாமல் பெரும் பான்மை யான சமூகங்களுடன், நாடுகளுடன் இணைந்து செல்வதுதான் வழி என்று நினைப்பது தவறு.

எது எமக்கான நீதி என்று தோன்றுகின்றதோ அதனை துணிச்சலுடன் கேட்க வேண்டும் என்றார் முதலமைச்சர். (செ-4)

# எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனை நியமிக்கவும்

## த.தே.கூ குழுக்கூட்டத்தில் தீர்மானம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டுமென அக்கட்சியின் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவது,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் இரா.சம்பந்தன் மீண்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

அதன்போது கூட்டமைப்பின்தலைவர் இரா. சம்பந்தனை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குழுக்களின் பிரதித்தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

இது தவிர, கட்சியின் கொறடாவாக த.சித்தார்த்தனும், பாராளுமன்றக் குழுச் செயலாளராக சி.சிறீதரனும், த.தே.கூட்டமைப்பின் பேச்சாளராக சுமந்திரனும் நியமிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## கோத்தா மீது...

ர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட குழுவினருக்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மேஜர் ஜெனரல்களான பாலித்த பிரனாந்து, கே.பீ.கொடவெல, எம்.ஆர். டபிள்யூ.சொய்சா, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர்களான உபாலி கொடிகார, துமிந்த சில்வா, தனசிறி அமரதுங்க, ஜனக ரத்நாயக்க ஆகியோர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் ஊழியர்கள் 550 பேரை தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தியமை, தேர்தலின் போது அந்நிறுவனத்தின் பணம் 86 லட்சம் பயன்படுத்தியமை தொடர்பில் இந் நபர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரக்னா லங்கா நிறுவனத்தின் ஊழியர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர்கள் ஊடாக கோட்டை, கொலன்னாவ, தெஹிவளை, கடுவெல, மஹரகம ஆகிய பிரதேசங்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தியதோடு, ஊழியர்களின் பற்றாக்குறைகளுக்காக சிவில் பாதுகாப்பு படையினரை பயன்படுத்தியதோடு, அவர்களுக்கு ரக்னா லங்கா சீருடை வழங்கப்பட்டமையும், அரசாங்கத்துக்கு சொந்தமான ஆயுதங்களை உரிமை பத்திரமின்றி களஞ்சியப்படுத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுகள் கோத்தபாய மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவுக்கு கிடைத்துள்ள 800 முறைப்பாடுகளில் விசாரணைகள் நிறைவடைந்து விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டாவது முறைப்பாடு இதுவென குறிப்பிடப்படுகிறது. (செ-12)

## சபாநாயகராக...

ளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரியவின் பெயரை முன்மொழிந்தார். அதனை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா வழிமொழிந்தார்.

துணை சபாநாயகராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதிய சபாநாயகர் நியமிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா, சபாநாயகர் கரு ஜெயசூரிய நாடாளுமன்றத்தில் நடுநிலையுடன் செயல்படுவாரென்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திசாநாயக்க, பொது மக்களின் நலன் கருதி நாடாளுமன்றத்தை வழி நடத்தி செல்வதற்கு புதிய சபாநாயகர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறினார்.

தமிழ்த தேசியக் கூட்டமைப்பின தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர். சம்பந்தன் புதிய சபாநாயகர் பாரபட்சமின்றி நியாயமான முறையில் செயல்படுவாரென்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். பறிக்கப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு புதிய சபாநாயகர் தனது பங்களிப்பை வழங்குவாரென்று எதிர்பார்ப்பதாகவும் சம்பந்தன் கூறினார். (செ-12)

## நாடா. குழுக்...

குழுக்களின் பிரதித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம அடைக்கலநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 17ஆம் திகதி இடம பெற்ற தேர்தலைத் தொடர்ந்து 8 ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது.

இதன்போது நாடாளுமன்றத்தின் சபா நாயகராக கரு ஜெயசூரியவும், பிரதி சபாநாயகராக திலங்க சுமதிபாலவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதையடுத்து. நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு ரெலோவின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனின் பெயரை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பரிந்துரைத்தார்.

இதையடுத்து செல்வம் அடைக்கலநாதனின் நியமனமும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதேவேளை, நாடாளுமன்ற அவைத் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவும், ஆளும்கட்சியின் பிரதம கொறடாவாக கயந்த கருணாதிலகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் ஈ.பி.டிபியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முருகேசு சந்திரகுமார நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராக பதவி வகித்திருந்தமை தெரிந்ததே. (செ-12)

## நாடாளுமன்ற...

ளவில் ஆரம்பிக்கப்பட்ட நாடாளுமன்ற அமர்வில் சபாநாயகர், பிரதி சபாநாயகர், ஆளும் கட்சியின் பிரதம கொறடா, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர், சபை முதல்வர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு, நாடாளுமன்ற் உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

பின்னர் சபை நடவடிக்கை பிற்பகல் 3 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகிய நாடாளுமன்ற அமர்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் சிறப்புரையாற்றியதோடு நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்றைய தினமே அமைச்சரவை உறுப்பினர்கள் தொடர்பில் நாடாளுமன்றில் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது குறித்து அடுத்த நாடாளுமன்ற அமர்விலேயே அனுமதி பெற்றுக் கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## உள்ளூர்...

முயற்சித்துவரும் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளை நாம் நினைவில் கொண்டுள்ளோம்.

இலங்கையில் சிறுபான்மையின மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்கள் தொடர்பில் நம்பகரமாக சர்வதேச பொறிமுறை ஒன்றே அவசியம்என வடமாகாண சபையும், பாதிக்கப்பட்ட மக்களும் கோருகின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் சிறுபான்மையினங்களுக்கு இடையே பாகுபாடுகள் கடந்த 6 தசாப்த காலமாக பரிணாமமடைந்துமுழுமையான சிவில் யுத்தமொன்றுக்கு கொண்டு போயுள்ளது.

இந்த யுத்தத்தில் பாரிய மனித அழிவுகள் நடைபெற்றிருந்தன. வட மாகாண சபை கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நிறைவேற்றிய தீர்மானத்தில்,

இங்கு நடைபெற்றது இனப்படு கொலையே என குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு முதல் எம்மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், அரசு எம்மை நடத்திவரும் விதம் என்பவையே எமது இத்தீர்மானத்துக்கு காரணங்களாகும்.

சர்வதேச சட்டத்தில் இனப்படு கொலை என்ற வரையறையில் இங்கு நடைபெற்றவை இனப்படு கொலை என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

இனப்படுகொலை ஒன்றை நிகழ்த்திய அரசினை ரோம் சாசனத்தில் கூறப்பட்டுள்ளது போன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினூடாக இலங்கை மீது விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் அதே அரசினால் விசாரணை செய்யப்படக் கூடாது.

இதில் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் இலங்கை அரசின் கீழ் உள்ளவர்களாக காணப்படுவதால் இவர்களுக்கு அரசாங்கமே பொறுப்பு. ஆகையால் இலங்கை அரசு இந்த விசாரணையை மேற்கொள்ள முடியாது.

உள்ளக பொறிமுறை மூலம் சர்வதேச குற்றங்களை விசாரிப்பது நீதிக்கு எதிர்மாறான முடிவினையே தரும். தன்னுடைய சொந்த படைகளை அந்த அரசே விசாரிப்பது என்பது நீதியினை மீறுவதாக இருக்கும். மேலும் சட்டபூர்வமாக எவ்வித உள்ளூர் சட்டமும் சர்வதேச குற்றங்களை விசாரணை செய்ய முடியாது.

இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் சமூக உரிமை மீறல்கள் நாட்டு மக்களை பாதுகாக்கும் முக்கியஸ்தர்களின் தவறுகளால் ஆழமாக வேரூன்றி போயுள்ளது.

இவ்வாறான முக்கியஸ்தர்களினால் விடப்படுகின்ற தவறுகளுக்கு குற்றவிலக்கு என்பது புதியதொரு சட்டமாக இலங்கையில் தற்போது இருந்து வருகின்றது.

இப்புதிய சட்டம் தமிழ் மக்களுக்கு பெரும் சுமையாக இருந்து வருகின்றது. இவை தொடர்பில் சர்வதேசத்துக்கும், சிங்களவர்களுக்கும் நன்றாகவே தெரியும்.

ஆகவே இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சர்வதேச குற்றங்களுக்கு நம்பகரமான சர்வதேச பொறிமுறை ஒன்றே அவசியம். இதனை இலங்கை அரசும் துணிச்சலுடன் எதிர்கொண்டு நாட்டில் மீள் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## சர்வதேச...

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் முன்மொழியப்பட்ட இப்பிரேரணையை உறுப்பினர் சிவாஜிலிங்கம் வழிமொழிய பிரேரணை எதிர்ப்பின்றி நிறைவேறியது.

நேற்றைய தினம் நடைபெற்ற வட மாகாண சபையின் மாதாந்த கூட்டத் தொடரின்போதே இப்பிரேரணை எதிர்ப்பின்றி நிறைவேறியது.

அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கு ஆதரவாக செயற்படப் போவதாகவும், உள்ளூர் பொறிமுறைக்கு ஆதரவளிக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவின் இந்த முடிவை மேற்கோள்காட்டியே வடக்கு முதலமைச்சர் மேற்படி தீர்மானத்தை அவசரமாக கொண்டு வந்திருந்தார்.

சபை ஆரம்பமாவதற்கு முன்னதாக வடக்கு மாகாண முதலமைச்சர், அவைத் தலைவர் சிவஞானம் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் முதலமைச்சரின் தீர்மானத்தை கொண்டுவர அனுமதியளிப்பதா? என்ற வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றிருந்தன.

பின்னர் வடக்கு முதலமைச்சரின் பிரேரணையைக் கொண்டு வருவது என்ற முடிவுடன் சிறிது நேரம் தாழ்த்தி காலை 9.50 மணியளவில் சபை ஆரம்பமாகியது.

சபை ஆரம்பமாகியதும் முதல் விடயமாக முதலமைச்சரின் பிரேரணை எடுத்துக் கொள்ளப்பட்டது. குறித்த பிரேரணை அவசரமாகக் கொண்டு வரப்பட்டதனால் தமக்கு கால அவகாசம் தேவை என எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கோரியதற்கு இணங்க தேநீர் இடைவேளையின் பின்னர் முதலமைச்சரின் பிரேரணை வழிமொழிதலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவரின் இரு திருத்தங்களுடன் பிரேரணையை உறுப்பினர் சிவாஜிலிங்கம் வழிமொழிந்து நிறைவேற்றி வைத்தார்.

இப்பிரேரணையை நாம் தமிழ் மக்களின் நலன்கருதி எதிர்க்கப் போவதில்லை எனக் கூறிய எதிர்க்கட்சியினர் நடுநிலைமை வகித்தனர்.

மேலும் இப்பிரேரணையை ஐ.நா மனித உரிமை ஆணையகத்துக்கும் அனுப்பி வைப்பதாக முடிவு செய்யப்பட்டது.

குறித்த பிரேரணையில் ஏன் தமிழ் மக்கள் சர்வதேச பொறிமுறை ஒன்றை கோருகின்றனர் என்பது பற்றிய விளக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முன்னணி சர்வதேச பல்கலைக்கழகப் பிரதிநிதிகள்
- அரச அங்கீகாரம் பெற்ற வேலைவாய்ப்பு முகவர்கள்
- சர்வதேச விசா சேவை வல்லுநர்கள்
- அரச - தனியார் வங்கிகள்

ஒரே அரங்கில் பங்குபற்றும்

**MEGA International Education & Job FAIR**

September 15th
9am-5pm
@ Gnanams Hotel, Jaffna

வெளிநாட்டு கல்வி - தொழில் - விசா கண்காட்சியும், அனுமதிகளும்

பிரவேசம் இலவசம்

| | |
|---|---|
| மிகக் குறைந்த கட்டணத்தில் UK, Australia, New Zealand, Switzerland, Poland, Spain, Canada, America, Malaysia, Singapore Switzerland, Singapore பல்கலைக்கழக அனுமதிகள் | 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள சர்வதேச விசா சேவை வல்லுநர்களின் Student Visa/Dependent Visa/Spouse Visa/Visit Visa/Work Permit/ Migration விசா விண்ணப்ப ஆலோசனைகள் |
| முன்னணி வங்கிகளின் வெளிநாட்டுக் கல்விக் கடன் ஆலோசனைகளும், கடன் ஏற்பாடும் | விரும்பிய நாட்டில் மாதம் 3 இலட்சம் வரையில் சம்பாதிக்கக்கூடிய Hotel Management கற்கைநெறி அனுமதிகள் |
| Australia, New Zealand, Canada வில் தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை (PR) | Dubai, Qatar, Bahrain, Oman, Malaysia, Mauritius, Saudi Arabia, Doha வேலைவாய்ப்புக்கள் |

காலை 9 - 10.30 விளக்கக் கருத்தரங்கு 10.30 - 5.00 நேரடி அனுமதிகள்

மேலதிக விபரங்களுக்கும், முற்பதிவுகளுக்கும்
077 36 16 798 / 0777 324 004

SIKARAM
Any Visa to Any Country

Sikaram (Pvt) Ltd.
No.275-2/1, Clock Tower Road,
(Behind Jaffna Hospital), Jaffna.

(சி-1999)




மகிந்த ராஜபக்ஷவும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் செல்பீ எடுத்துள்ளனர். இந்த செல்பீயை நாமல் ராஜபக்ஷ தனது சமூக வலைத்தளங்களான டுவீட்டர் மற்றும் பேஸ்புக்கில் பகிர்ந்துள்ளார்.

## எல்லோரும் ஏற்கும்...

மொன்று உருவாக்கப்படவுள்ளதாகவும் மைத்திரி கூறினார்.

நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர் சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல்யாப்பொன்று உருவாக்கப்படாதது துரதிர்ஷ்டமானதென்றும் அவர் தனது உரையில தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமென்று குரல் கொடுக்கப்பட்டு வருவதாகக் கூறிய மைத்திரிபால சிறிசேன, இந்த முறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சிலர் கூறிவருவதாகவும் தெரிவித்தார்.

ஆனால் ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டுமா அல்லது திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டுமா என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி கூறினார்.

அதேபோல, தேர்தல் முறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அழுத்தம் கொடுக்கப்பட்டுவருவதாகக் கூறிய ஜனாதிபதி மைத்திரி, இதன்படியே கடந்த நாடாளுமன்றத்தில் அரசியல் யாப்பின் இ[illegible]பதாவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டதாகக் கூறினார்.

எனவே புதிய தேர்தல் முறையொன்றை உருவாக்கும் பொறுப்பு தற்போதைய நாடாளுமன்றத்தின் முன் இருப்பதாகவும் கூறினார்.

சட்டத்தை அமல்படுத்தும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மேலும் பலப்படுத்தப்படுமென்று கூறிய ஜனாதிபதி, அரச சொத்துக்களை அபகரித்த நபர்களுக்கு பாரபட்சமின்றி தண்டனைகளை பெற்றுக் கொடுப்பதற்கு தான் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார். (செ-12)


### தவறிவிட்டது

மாடசாமி சுவேந்திரன் என்பவருடைய மருத்துவ அறிக்கை (Medical Report) கிளிநொச்சி கரடிபோக்கு சந்திக்கும் பரந்தன் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு : 0770326020

(சி-2005)


## கணவனும் மனை...

தயா கமகே மற்றும் அக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அனோ[illegible] கமகே ஆகிய இருவருமே இவ்வாறு கணவன், மனைவியாக நேற்று பதவியேற்றுக் கொண்டுள்ளனர்.

நாட்டில் கடந்த மாதம் 17ஆம் திகதி இடம் பெற்ற தேர்தலைத் தொடர்ந்து எட்டாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நேற்று ஆரம்பமான போதே, இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இதற்கு முன்னதாக 35 ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய தேசியக்கட்சியின் ஹரிஸ்பத்துவ தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக ஆர். பி. விஜேசிறி மற்றும் குண்டசாலை தொகுதி உறுப்பினராக திருமதி விஜேசிறி ஆகிய இருவருமே கணவன், மனைவியாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


### வேலைவாய்ப்புகள்

2015 A/L எழுதியவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்... பரீட்சையின் பின் தொழில் வாய்ப்புகள்...

எமது சர்வதேசத்தர DMI நிறுவனமானது பல கிளைகளை ஸ்தாபிக்கவுள்ளது.

- வயதெல்லை 18 - 29
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
- நிர்வாக உத்தியோகஸ்தர்கள், விநியோகஸ்தர்கள்
- அனுபவம் அவசியமற்றது.

தொடர்புகளுக்கு : 0772302795,0777981471

No.70,4th cross street, Jaffna. (சி-2003)

FLC FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

| | | |
|---|---|---|
| No. 40, பலாலி வீதி, ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 12.09.15 சனி 8 மணிக்கு | பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09 @ 4pm. | கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 16.09 @ 4pm |

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

(சி-1996)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.யாழ்.பல்கலைக்கழக பிரெஞ்(பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள்.யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.



13.09.15சனி,ஞாயிறு11-1pm உடன் பதியுங்கள்
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (1627)





Saravana Tex

நல்லூர் திருவிழாக்கால சிறப்புத் தள்ளுபடி

சரவணா ரெக்ஸ் நல்லூர்
(வேறு கிளைகள் இல்லை)

ஒரு கொட்டன் ரெடிமேற் சல்வார் வாங்குவதற்கு 6000 ரூபா தேவையா? இல்லவே இல்லை 3500 ரூபா மட்டும் போதுமே...... 2500 ரூபா சேமிப்பு

பல பல புத்தம் புதிய டிசைன்களில் என்னற்ற சாறி தெரிவுகளுக்கு

பான்சி திரட்வேக் கொட்டன் சாறி 2400 ரூபா இல்லை வெறும் 1650 ரூபா மட்டுமே

இது விளம்பர டயலோக் இல்லை உண்மையான அனுபவம்

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், (பின் வீதி)
(சிவன் கோவில் அருகில்) யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 1723

(சி-2002)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org